சொபக்கிளெசு

மன்னன் ஈடிபசு

தமிழாக்கம்: இ. இரத்தினம்

T. 881
SOP

செய்யுட்கள் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொபக்கிளிசின்

மன்னன் ஈடிபசு

தமிழாக்கம்

இ. இரத்தினம்

275539

செய்யுட்கள் வெளியீடு

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை

			பக்கம்
முகவுரை	...	...	iii
இயற்பெயர் விளக்கம்		...	ix
திபசின் தொல்கதை		...	xi
மன்னன் ஈடிபசு	...	...	*1*

வெளியீடு:

செய்யுட் களம்
149/3, *காலி வீதி*
கொழும்பு - 4

பதிப்பகம்:

குகன் அச்சகம்
காங்கேசன்துறை வீதி
தெல்லிப்பழை (யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

நல்லவை கூறும் தமிழுலகிற்கு இந் நூலைப் படைக்கின்றேன். என்று இந் நூலை ஆங்கிலத்திற் படித்தேனே அன்றிதனைத் தமிழாக்க எண்ணினேன். யாதோ எழுதவேண்டுமென்ற ஒரு நசை என்னை உந்தி இதை ஆக்கவில்லை. உலகத்தெழுந்த நாடகங்களுள் தலை சிறந்ததான இதைத் தமிழில் யாவரும் சுவைத்தாலோ என்ற ஓர் இயல்பூக்கால் இதை எழுதினேன்.

கிரேக்கப் பேரறிஞரான அரித்தோத்தில், தாமெழுதிய புலமை யிலக்கண நூலில், நாடக இலக்கணம் எழுதுவதற்கு இதை இலக்கிய மாகக் கொண்டாரென்றால் இதன் சிறப்பினை நாம் கூறுதல் எளிதன்று. இதனிலக்கணம் நாடக இலக்கணமாக அமையவே, மேல்நாட்டில் சென்ற 2500 ஆண்டுகளாக எழுந்த நாடக இலக்கிய வடிவம் இத னழகால் ஊக்கப்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

திருக்குறளிற்கு அணிந்துரை அளித்தாருள் ஒருவர், திருக்குறள் "என்றும் புலராது யாணர் நாட்செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும்" தன்மையது என்று கூறுகின்றார். உண்மையில் அக் கூற்று இந் நாடகத்திற்குப் பொருந்தும். இன்னும் திருக்கோவையார் நூற்சிறப்புக் கூறவந்த ஓர் ஆன்றோர், அதனை ஆகமத்தின் காரணம் என்றும், காமநன்னூலென்றும், ஏரணமென்றும், எழுத்தென்றும் பற் பல விதமாகக் கூறியிருக்கின்றார். இச் சிறப்பு, மன்னன் ஈடிபசிற்கும் பொருந்தும். 2400 ஆண்டுகளாக இதனை ஆய்ந்த புலவோர் பல்வேறு நலன்களை இதனுள் கண்டுளர்.

இம் முகவுரையில் அதைப்பற்றிச் சுருக்கமாகவே சொல்வோம். சொபக்கிளிசு இந் நாடகத்தை எழுதத் தொடங்கும் பொழுது அவர்க்கு நாட்டில் வழங்கிய தொல்கதை மூலமிருந்தது. அது வருமாறு:

தீபசு நாட்டின் மன்னன் இலயசு, இராணி, யோகதா. அந்நாட் டின் தெய்வ வாக்கு இவர்கள்பற்றி ஒரு முன்னுரை கூறியது. இவர்க்குப் பிறக்கும் மகன் தந்தையைக் கொன்று தாயை மணமுடிப் பன் என்பது அவ்வுரை. இவர்க்குப் பிறந்த ஆண்மகவு கால் குத்தப் பெற்றுக் காட்டு மலையில் இறக்குமாறு விடப்பெற்றான். அங்கு ஓர் இடையன் இம் மகவைக் கண்டெடுத்துப் பிறிதோர் ஆட்டிடையனி டம் கொடுக்கின்றான். அவன் அதைக் கொரிந்துநகர் எடுத்துச் சென்று அந்நகர் மன்னனிடம் கொடுக்கின்றான். அம் மன்னன் அம் மகவைத் தன் மகனென வளர்த்து வருகிறான். அங்கு இம் மகவு ஈடிபசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கதை காலன்) என்ற பெயரில் வளர்கிறான். இங்கும் இந் நாட்டுத் தெய்வக்குறி ஈடிபசை வருத்துகின்றது. தன் தந்தையைக் கொன்று தாயை மணப்பன் என்பதே இங்கும் அவன் பெற்ற முன்னுரை. நேருவதஞ்சி அவன் கொரிந்தை விட்டோடுகின்றான். வழியில் அவன் ஒரு கிழவனையும் அவன் ஏவலர்களையும் சந்திக்கின்றான். அங்கு இவர்களுடன் எழுந்த பிணக்கில் இவன் அவர்கள் எல்லோரையும் கொல்கிறான். தீபசை நாட்டைச் சிபிஞ்சு வருத்தும் தருணத்தில் இவன் அங்கு தோன்றுகிறான். சிபிஞ்சு அளிக்கும் புதிர்களை விடுத்து இவன் நகரைக் காப்பாற்றுகிறான். பின் இவன் கைம்பெண் அரசியான யோகதாவை மணக்கிறான். பல பிள்ளைகள் பெறுகிறான். பல்லாண்டு வளம்பெற்று ஆள்கிறான். ஆயினும் பின் தீபசைப் பஞ்சமும் நோயும் வாட்டின. இலயசைக் கொன்றவன் தண்டிக்கப்படவில்லையாதலினால் கடவுளர் கோபிப்பர் என்று தெய்வக்குறி கூறுகின்றது. அப்பொழுது மன்னன் ஈடிபசு அப்பணியை நிறைவேற்ற முயல்கின்றான். அப்பொழுது அக் குற்றவாளி தானேயென்றும் யோகதா தன் தாயென்றும் அறிகிறான். பின் அவன் தன்னைக் குருடனாக்கி நாடுதுறந்து போகின்றான். பின் இவன் அதென்சில் இறக்கிறான்.

நாடக அமைப்பு

சொபக்கிளிசு ஆசிரியர், நாடகத்தைப் பின்பாகத்திலிருந்து தொடங்கி முன் நிகழ்ச்சிகளை உரைவாயிலாகப் புலப்படுத்துகின்றார். ஈடிபசு மன்னன் ஆட்சிக் காலத்தில் தீபசுநாட்டில் நேர்ந்த பஞ்சத்துடன் காட்சி தொடங்குகிறது. பஞ்சத்தின் காரணம், இலயசைக் கொன்றவன் தண்டிக்கப்படாமல் இருத்தலே என்று தெரியவருகிறது. அடுத்து இலயசைக் கொன்றவனை யாரென அறிய முயற்சி எடுக்கப்படுகிறது. படிப்படியாகப் பழைய நிகழ்ச்சிகள் கண்முன் கொண்டு வரப்படுகின்றன. இறுதியில் ஈடிபசு, தெய்வக்குறி சொல்லியதற்கிணங்கத் தந்தையைக் கொன்று தாயை மணந்தவன் என்பது புலப்படுகின்றது.

இந் நாடக அமைப்பின் பல சிறப்பியல்புகளை நாம் கவனிக்க வேண்டும். முக்கியமாக எடுத்த ஒருபொருள் நாடகத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் ஊடுருவி நிற்கின்றது. வேறு செய்திகள் அங்கில்லை. நாடகவினை ஒடியாது முன்னேறுகின்றது. அதற்கு இடையூறாக ஆசிரியர் வேறு ஒன்றையும் புகுத்தவில்லை. ஒரே காட்சியில் இருபத்து நான்கு மணிநேரத்துள் இறந்தகாலம் நிகழ்காலம் எல்லாம் ஒன்றி விடுகின்றன. இறுதியில் எதிர்காலம் நம்முன் காட்சியளிக்கின்றது. நாடக நிகழ்வெல்லாம் ஒடியாது ஊடுருவி நிற்கும் ஒரு பெருநோக்கை நாம் எம் உள்ளத்தாலும் உடலாலும் உணரக்கூடியவராயிருக்கிறோம். இது இந் நாடகத்தின் தனிச்சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள நாவல்கள் போன்றவையே பழைய புராணங்கள், தொல் கதைகள். சிலப்பதிகாரத்துக் கோவலனும் கண்ணகியும் இளங்கோவுக்கு உடன்முன் இருந்தவரோ அவர்கட்குப் பல்லாண்டுகட்கு முன் இருந்தவரோ நாம் அறியோம். இராமாயணம், மகாபாரதத்திலுள்ள பல வரலாறுகளும் ஆங்காங்கு சிறிதுசிறிதாக வளர்ந்தவையே.

இந் நாடகத்தின் சூழ்ச்சியை அமைத்தவர் சொபக்கிளிசே. கதை தொல்கதை. நாடகச் சூழ்ச்சி சொபக்கிளிசினது. கதையின் வினையைச் சுவை ஒடியாது பேணி வளர்ந்துவரும் ஓட்டமாக நிலைபெறுத்துவதற்குத் தகுந்தவகையில் கதையின் இறுதிப்பாகத்தை அவர் நாடக ஆரம்பமாக எடுக்கின்றார். கதையின் பிற்பகுதியிலிருந்து தொடங்கினும் கதையின் சூழ்ச்சி தருக்கமுறையிலமைந்துள்ளது. ஒன்றோடொன்று பொருள்பட இணைந்து நிற்பது.

இவ்விடத்தில் சூழ்ச்சி, வினையென்ற இரு கருத்துக்களைப்பற்றிக் குறித்தல் உவந்தது. சூழ்ச்சியென்பது நிகழ்ச்சிகள் பொருள்பட ஒழுங்கு பெற்று நிற்பது என்பர் அரித்தோத்தில். ஈடிபசில் சூழ்ச்சி தருக்கமுறையிற் பிற இடைபுகலின்றி நிற்பதை நாம் காணலாம். இன்னும் நிகழ்வுகள் அமைதிபெறும் ஒழுங்கில்மட்டும் இணைந்துவிட்டாற் போதாது. அந் நிகழ்ச்சிகளும் அடுத்து எழக்கூடிய நிகழ்ச்சிகளைப் பயக்கும் ஆற்றலைத் தம் அகத்தே கொண்டனவாய் இருத்தல் வேண்டும். தைரேசியசை ஈடிபசு கடிகின்றான் எனில் அதற்கு ஓர் காரணம் வேண்டும். வாளா சொல்லழகைக் காட்டுவதற்காக அந் நிகழ்ச்சி நாடகத்துள் புகலாகாது. மாதவியின் அகத்துறைப் பாடல் வேறு குறிப்பொன்றைக் கொண்டிருப்பது தற்செயலாக அன்று. அங்கு ஊழ்வினை தொழிற்பட நின்றது என்பதை அது காட்டுகின்றது.

வினையென்பதுதான் உண்மையில் நாடகம். வழக்கமாக ஊர்ப் பேச்சில் 'கூத்து' என்றும் இதைக் கூறுவோம். இவ்விரண்டு சொற்களும் நாடக இலக்கியத்தையோ நாடக நடிப்பையோ குறிக்கவில்லை. ஆயின் "இவன் என்ன கூத்துச் செய்கிறான்" என்கின்றபொழுது "நாடகம்", "கூத்து" என்பவற்றின் உள்பொருள் கூத்து என்பதில் அடங்கியிருக்கிறதை நாம் காண்கிறோம். இங்கு கூத்து என்பது 'போலி வேடம்', போலிச் செய்கை என்று பொருள்படும். வினையென்று அரித்தோத்தில் நாடக இலக்கணத்திற் கூறுவது இந்த நடிப்பையே. உண்மை நிகழ்வைப்போல் நடிப்பதனையே வினையென்பர். வினையென்பதற்கு விளக்கம் தரும் இன்னொரு சாரார், வினையென்றால் நாடகச் செயலின் குறிக்கோள் என்ன என்பதைக் குறிக்கும் என்பர். நாடகத்தின் குறிக்கோள் ஆசிரியர் எடுத்துக்கூற வந்த நாடக உட்பொருளே. இதை நாம் நாடகத்திலிருந்து வடித்தெடுக்க வேண்டியது. இது அவரவர் இயல்பைப் பொறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் விளக்கம்

பொருள் விளக்கம் என்கின்றபொழுது இங்கு கருதப்பட்டது சொற்பொருள் விளக்கமன்று. ஆயின் சொற்பொருளாயமைந்ததன் உட்பொருள் விளக்கமே.

இன்றுள்ள கிரேக்க நாடகங்களுள் உலகோரால் உயர்ந்தது என்று கருதப்படுவது **மன்னன் ஈடிபசு**. என்னைப் பொறுத்தவரையில் உலகத்து நாடகங்களுள் எது சிறந்தது என்று கேட்டால் தயக்கமின்றி அது **மன்னன் ஈடிபசு** என்றே கூறுவேன். எனவே, ஒருவர் என்ன காரணங்களால் என்று கேட்பது இயல்பே.

இந் நாடகத்தைத் தழுவி நாடகம் எழுதியோர் பலர். பல சந்ததியினர் இதன் உட்பொருளைப் பல்வேறு வகைப்படுத்தி ஆய்ந்துள்ளனர். நாடகத்தார் மட்டும் இதை ஆராயவில்லை. ஒழுக்கவியலார், உளவியலார், வரலாற்றுசிரியர், தொல்மனிதவியலார் இவ்வாறு பல்வகையோர் பலவேறு கண்கொண்டு ஆய்ந்துளர்.

இந் நாடகம் இவ்வாருகப் பல்துறைகளுக்கும் ஒரு தலைமை வகையாக அமைந்துளது. இதன் உருவம், பொருள் ஆகியவற்றிற்குப் பல்வேறு விளக்கமும் கருத்துமளித்தோர் அவற்றை அடிப்படையாக வைத்துத் தம் இலக்கியக் கொள்கைகளை விரித்தனர். நாடகங்களை அமைத்தனர்.

இந் நாடகம் குறிப்பாக அறிவின் இயல்பின்மையையும், தீமை, நல்லவர் கெட்டவர் என்று மனிதரைப் பாகுபடுத்தாது வருத்தும் இயல்பையும், எடுத்துக் காட்டுகிறது. ஈடிபசு தன்னையறியாமலே குற்றம் புரிகின்ருன்; பின் எவ்வாறு தன் ஊனக்கண்ணை இழந்தானே அவ்வாறு நாடகச் செயல் முழுவதும் தன் அகக்கண்ணை இழந்தவனுக விளங்குகின்ருன்; தன்னையறியாமல் தனக்குச் சாபமளித்துத் தான் விழத் தானுகவே உழைக்கின்ருன். இதில் இருக்கும் வியப்பென்னவென்ருல், இவன் தன் பாதகத்தை நாடக ஆரம்பத்தில் உணரவில்லை நாடகவினை கட்டவிழும்போது சிறு ஐயம் அவன் மனதில் தோன்றுகிறது. எனினும் அறம் காக்கப்படவேண்டும்; தீவினை தண்டிக்கப்படவேண்டுமென்று அவன் போராடுதலே அவன் அழிவிற்குக் காரணமாகின்றது. நாடகம் முழுவதும் உண்மையை அறிய அவாவும் ஓர் உந்தல் தலையெடுத்து நிற்பதை நாம் காணலாம். சொபக்கிளிசின் நாடகவியலில் ஓர் அற்புதம், காட்சிகள் மாறமாற நாயகனின் அறவேட்கை வீறுபெற்றெழுதலே. உண்மை பொல்லாததும் இழிவானதுமானது என்ற குறிப்புத் தோன்றியும் ஈடிபசு பின்வாங்கவில்லை. சிலப்பதிகாரத்து ஊழ் முற்பிறவியில் நிகழ்ந்தது. கோவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியைப் பிரிந்தது ஒரு தற்செயல். பின் பொற்கொல்லன் சூழ்ச்சியால் இறந்ததும் ஒரு தற்செயல். ஈடிபசு இலயசைக் கொன் றதும் யோகதாவை மணந்ததும் தற்செயல்கள். ஆயின் நாடகத்தில் இவற்றின் பலாபலன்கள் ஈடிபசின் அயரா உழைப்பினுல், உண்மை அறியும் ஆவலால் எழுகின்றன. எழுந்து, ஈடிபசின் அறஉள்ளத்தை யும் ஊழின் கருணையற்ற போக்கையும் காட்டுகின்றன.

ஒரு கேள்வி. அறிவர் உரையினைக் கேட்டபின் ஈடிபசு யாரை யாகுதல் கொலை செய்யலாமா? ஆரையேனும் மணக்கலாமா? மிக்க அவதானமாயிருந்தால் ஈடிபசு அவ்வாறு செய்திருக்கவே கூடாது. ஆயின், ஊழ் ஈடிபசிற்கு முன்னறிவை அளிக்கவில்லை. சொபக்கிளிசு, ஈடிபசின் மாசற்ற நெஞ்சத்தையும் அவன் படும் துன்பத்தையும் எதிர்வைத்துக் காட்டுவதிலேயே நாடகத்தின் முழுத் துடிப்பும் தங்கியுள்ளது. ஈடிபசு குற்றம் செய்யவில்லை என்பது சொபக்கிளிசின் கருத்து; செய்தான் என்பது கடவுளர் கருத்து. இந்த இரண்டு இடர்ப்பாடுகளையும் எவ்வாறு சொபக்கிளிசு தீர்க்கிருர். இவர் தீர்ப்பில் ஏதோ குறிப்பிருக்கவேண்டும். அது யாது? "மனிதனுல் ஆவதொன்றில்லை, கடவுள் நெறியே கைகூடும்" என்பதுதான் அவர் உட்கிடக்கை. தனிமனிதன் என்றும் சமூகத்தில் தனிநிற்க இய லாது. சமூகத்திற்குக் கட்டுப்பட்டவன் மனிதன் என்பது இதிலிருந்து உய்த்தறியக் கூடியதாயுள்ளது.

ஈடிபசு நீதிநெறி தவருத மன்னன் எனினும் அவன் தான் செய்த தவற்றிற்குத் தானே தண்டனை விதிக்கின்ருன். இது இளங்கோவின் பாண்டிய மன்னனை நமக்கு நினைவூட்டுகிறது.

நாடகச் செம்மையில் முக்கிய ஓர் அமிசம், பாத்திரம் ஒன்றின் இயல்பான பண்பிற்கும் சமூகச் சூழலால் ஏற்படும் எதிர்பாராத இக் கட்டுகளுக்கும் இடையே எழும் போராட்டமாகும். ஈடிபசு நாடகம் முழுவதும் விரவி நிற்பது இச்சிறப்பு அமிசம்.

யோகதாவில் நாம் ஒரு சாதாரண மானுடப் பெண்ணைக் காண் கிருேம். நன்மை, தீமை என்பனவற்றை நாம் கடவுளரை அஞ்சி அளக்கலாகாது; எங்கள் உலக வாழ்வின் அத்தியாவசிய தேவை களைக்கொண்டு அளக்கவேண்டும் என்பது அவள் எண்ணம். ஈடி பசின் பாவத்தை எப்பொழுது அவள் உணர்ந்தாள்? இதற்கு நாம் ஒரு நிச்சயமான விடை அளிக்கமுடியாது.

ஈடிபசு நாடகத்திலிருந்த சீச்மண்ட் பொரெயெட் என்பார் தம் புகழ்பெற்ற ஈடிபசு உளக்கோட்டம் என்ற கொள்கையை விரித்தார். சிறு ஆண்குழந்தை என்றும் தந்தையைக் கொன்று தாயின் அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைப்பெற முயலுமென்பது இக்கொள்கையின் சாரம். இந் நாடகம் இன்னும் ஓர் அற்புத உளக்கோட்பாட்டை அறிவுறுத்துகின்றது. உண்மை யாது என்று நாம் தளராது உசாவிக்கொண்டு போனுல், அது எம் அடிமனதில் ஆழ்ந்து புதைந்திருப்பதைக் காணலாம் என் கின்றது அது. இப்பொழுது எமது மேற்சிந்தையில் நின்று எம்மை வருத்தும் இடர்கள் யாவென நாம் அறியவேண்டின், நம் மனதை, நம் பண்டைச் செயல்களை நாம் துருவி ஆராயவேண்டும். அப் பொழுது உண்மை புலப்படும். நம் சஞ்சிதங்கள் நின்று நம்மை இன்று நெறிப்படுத்துவதை நாம் உணரலாம். ஈடிபசில் இந்த உண்மை மிகத் துலக்கமாக வெளிப்படுவதை நாம் காணலாம்.

மன்னன் ஈடிபசு நாடகம் ஒரு சிந்தனைக் கருவூலம். எத்தகைய பகுப்பாய்விற்கும் நெகிழ்ந்து நிற்கக் கூடியது.

நன்றி

இந் நூலைத் தினகரன் வார இதழில் தொடர்ந்து வெளியிட்டு என்னை ஊக்கிய அன்பர் தினகரன் ஆசிரியர் திரு. இ. சிவகுருநா தன் அவர்கட்கு நன்றியறிதலுடையேன். இந் நூலைத் திறம்பட அச்சேற உதவிய குகன் அச்சக முகாமையாளருக்கும், கண்ணுங் கருத்துமாய்ச் சரவை பார்த்துதவிய செல்வி கமலாம்பிகை இரா முப்பிள்ளை அவர்கட்கும், திரு. க. விக்னேஸ்வரர் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

இந் நூலை உருவாக்குமாறு என்னை அடிக்கடி ஊக்கி அச்சுக்கு வழிகாட்டிய நண்பர் திரு. இ. அம்பிகைபாகனுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

இ. இரத்தினம்

செய்யுட்களம்
149/3, காலி வீதி
கொழும்பு - 4
12 - 3 - 69

UNIVERSITY OF CEYLON LIBRARY

இயற்பெயர் விளக்கம்

அகனர் — கதுமசின் தந்தை

அதினு — பலாசு

அப்பலோ — ஒரு கிரேக்க தெய்வம். ஞாயிற்றுத் தெய்வம்.

அபயன் — ஒரு நகர்

அன்றிகனி — ஈடிபசின் ஒரு மகள்

ஆட்டமி — ஒரு பெண்தெய்வம். கன்னியரின் அழகே உருவான தெய்வம்.

இசுமீன் — ஓர் ஆறு

இசுமென் — ஈடிபசின் மகள்

இலபகசு — பண்டைத் தீபசு மன்னருள் ஒருவன். இலயசின் தந்தை.

இலயசு — இலபகசின் மகன்; ஈடிபசின் தந்தை.

இலிசயன் — அப்பலோ

இலிசியன் — இலிசியா எனும் மலைநாட்டிற்குரிய

ஈடிபசு — தீபசு நகரின் இலயசிற்கும் இராணி யோகதாவிற்கும் மகன்

ஈசுமசு — கிரேக்க நாட்டுப்பகுதி

உலொட்சியசு — அப்பலோ

எலிகன் — ஒரு மலையடுக்கம்

ஒலிம்பசு — ஒரு மலையடுக்கம்

கதுமசு — அகனரின் மகன். இவனே தீபசு நகரை நிறுவியவன்

கிரயன் — யோகதாவின் சகோதரன்

குழு — தீபசு நாட்டுப் பெரியோர் குழு. குழுவிற்காகத் தலைவன் பேசுவது வழக்கு.

கொரிந்து — ஒரு நகர்

சிதரன்
சித்திரன் — ஒரு மலையடுக்கம்

சிபிஞ்சு — ஒரு பெண்பேய். இவள் தீபசு நகர் மக்கட்கு நொடி சொல்லி அதற்கு விடையளியாதவர்களைக் கொன்றுள். ஈடிபசு இவளை வென்றுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலீன் — ஓர் உயர்மலை

சூசு — கிரேக்கர் கடவுளர்களுள் உயர்கடவுள். விண்ணிற்கு இறை.

தயோனிசு — மதுத்தெய்வம். ஆதியில் வனத்தெய்வம்.

தீபசு — ஒரு நகர்

தெல்பி — ஒரு நகர்

தெலோசு — ஒரு தீவு

தொரிசு — கிரீசில் ஒரு மலைநாடு

தௌலியா — ஒரு நகர்

பக்கசு — தயோனிசசு; மதுவின் தெய்வம்.

பலாசு — அதினு. கிரேக்கர் தெய்வங்களுள் ஒன்று. அறிவு முயற்சி முதலியவற்றின் தெய்வம்.

பானசு — தெல்பிக்கு வடபாலுள்ள ஓர் உயர் மலைச்சிகரம்

பிதியன் — பிதியம் எனும் நகரிற்குரிய

பீபசு — அப்பலோ

பைதோ — அப்பலோ

பொலிதரசு — கதுமசின் மகன், இலபகசின் தந்தை.

பொலிபசு — கொரிந்து மன்னன். ஈடிபசை வளர்த்த மன்னன்.

போசிசு — வட கிரீசிலுள்ள ஒரு நாடு

மதனிகை — மருட்டுபவள்

மயனுட்டு — வெறிதரும், வெறிக்கடவுள் சார்ந்த

மெரோபி — பொலிபசின் மனைவி

மெனேசியசு — கிரயன், யோகதா ஆகியோரின் தந்தை

வீபசு — பீபசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபசின் தொல்கதை

தீபசுநாடு போசியா எனும் பெருவெளியிலிருந்தது. போசியா அதென் நாட்டிற்கருகில் வடக்கே ஓர் ஒடுங்கிய நிலப்பரப்பாயமைந்திருந்தது. தெல்பியெனும் தெய்வமொழித்தலத்தின் துணையோடு கதுமசு முதன்முதலாக ஒரு நகரை நிறுவினான். இவன் அகனர் அரசனின் மகன். இந் நகரை நிறுவி முடிக்குமுன்னரே இவனுக்குப் பேரிடர்கள் நேர்ந்தன. இந் நாட்டிற்கண்மையிலிருந்த பள்ளத்தாக்கிலிருந்த ஒரு பெருவிலங்கு இவனின் தோழர்கள் எல்லோரையும் விழுங்கிவிட்டது. ஆயின், கதுமசு ஒரு வீரனாயிருந்தபடியால் அதனுடன் போரிட்டு அதைக் கொன்றுவிட்டான். இந்தப் பெருவிலங்கின் பல்லினை இந்நகரில் விதைக்குமாறு இவனுக்குத் தெய்வ ஆணை பிறந்தது. இவன் அவ்வாறு செய்தனன். உடனே நிலத்திலிருந்து பொல்லாதவையும் படை பூண்டவையுமான பல பூதங்கள் தோன்றித் தம்முள் முரண்பட்டுக் கடுஞ்சமர் புரிந்தனர். இறுதியில் ஐவரே எஞ்சினர். இவர்கள் கதுமசிற்குப் பணிவுபூண; இவர்கள் கதுமசுடன் சேர்ந்து தீபசு நகரைத் தோற்றியோர் ஆயினர்.

கதுமசிற்குப் பொலிதரசும், பொலிதரசிற்கு இலபகசும், இலபகசிற்கு இலயசும் மக்களாகப் பிறந்தனர். இலயசு யோகதாவை மணந்து ஒரு மகனைப் பெற்றான். இவனுக்கு ஒரு பெயர் அளிக்குமுன்னராகவே, பிறப்பதற்கு முன்னராகவே, இவன் வாழ்வு சாபத்திற்குள்ளாகியது. அப்பலோவின் முன்னுரை இவனுக்குக் கேட்டைத் தவிர நன்மை சொல்லவில்லை. இம் மகன் தந்தையைக் கொன்று தாயை மணப்பான் என்பது அந்த உரை. கடவுள் உரைக்கு எதிராக எந்த மானுடம் போராடமுடியும்? எவன் தப்ப முடியும்? இலயசும் யோகதாவும் அவ்வுரையை நம்பினர். இவர்களுக்கு ஆறுதலளிக்க ஒரேயொரு வழி இருந்தது. அக் குழந்தையை உயிருடன் விடலாகாது என்பதுதான் அது. குழந்தையைக் கொல்லும் பாவத்தை அவர்கள் தாங்களே மேற்கொள்ள விரும்பவில்லை. எனவே, அவர்கள் தம் பணியாளான ஆயன் ஒருவனிடம் குழந்தையைக் கொடுத்து அதை அயலில் உள்ள மலைச்சாரலில் விட்டுவருமாறு பணித்தனர். கொடுக்குமுன், குழக்தையின் கால் இரும்பு ஆணியால் துளையிடப்பட்டு அது தவழமுடியாமற் செய்யப்பட வேண்டுமென்பதும் அவர்கள் கட்டளை. தவழ்ந்தால் அது தப்பிப் பிழைத்துவிடுமென்று அவர்கள் அஞ்சினர்கள்.

இப் பணி நிறைவேற்றப்பட்டது. எனினும் மனிதனின் இரக்கப் பண்பும் அப்பலோவின் ஆணையும் நிலைநின்றன. ஏனெனில், அக் குழந்தையை மலையடியிற் சாகவிட அவ்வாயனுக்கு மனம் வரவில்லை. அவன் மலையடியிற் குழக்தையை விடவில்லை. கொரிந்திலிருந்து வந்த ஆயன் ஒருவனிடம் கொடுத்து அதைத் தீபசு நகரின் எல்லைகளுக்கு அப்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல்லுமாறும் அவனே அதை வளர்க்குமாறும் வேண்டினன். இவ்வாயன் கொரிந்தின் மன்னன் பொலிபசு என்பானின் பணியாள் ஆதலின், அவன் இக் குழந்தையைத் தன் அரசனிடம் எடுத்துச் சென்றான். கொரிந்தின் அரசனுக்குக் குழந்தையில்லாதபடியால் அவன் அக் குழந்தையை மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தன் குழந்தைபோல் போற்றி வளர்த்து வந்தான். அக் குழந்தையின் கால் ஆணியின் துளையால் வீங்கியிருந்ததால் அக் குழந்தைக்கு ஈடிபசு (கதைகாலன்) என்ற பெயரளித்தனன் அவ்வரசன்.

இங்கு ஈடிபசு கொரிந்தின் இளவரசனாக வளர்ந்து நற்பருவமெய்தினன். பொலிபசையே இவன் தன் தந்தையெனக் கருதினன். தற்செயலாக இவன் ஒருநாள் அப்பலோவிடமிருந்து தன் எதிர்காலத்தை அறியவேண்டி நேர்ந்தது. முற்கூறிய உரையே இங்கும் கூறப்பட்டது. தன் பெற்றோரைப் போலவே இவனும் அப்பலோவின் முன்னுரையைப் பொய்ப்பிக்க விரும்பினான். எனவே, இவன் கொரிந்திலிருந்தும் வெளியேறி நாடுகளிடை அலைந்து திரிந்தனன். இவ்வாறு இவன் அலைந்து திரியுங்கால் தீபசு நகரிற்கு வந்தனன். இங்கு குழப்பமான நிலை நிலவியது. அரசன் இலயசை இனந்தெரியாக் கள்வன் ஒருவன் தெருவிற் கொலை செய்தனன். நாட்டைச் சிபிஞ்சு எனும் ஒரு பொல்லா விலங்கு வருத்தி வந்தது. இவ் விலங்கு புதிர்கள் கேட்பது வழக்கம். அப் புதிர்களுக்கு விடை கூறத் தவறும் மனிதர்களை இவ் விலங்கு கொன்றழித்தது. ஒருவரேனும் சிபிஞ்சின் புதிர்களுக்கு விடை கூறி அதை வெல்ல முடியவில்லை. ஆயின், ஈடிபசு சிபிஞ்சின் புதிர்களுக்கு விடை கூறினான். அதன் ஆற்றலை அழித்தான். அதனால் தீபசு அவனை மகிழ்ந்து வரவேற்றது. தீபசு அவனை அந்நாட்டு மன்னனாக வரவேற்றது. அரண்மனைக்கும் அதன் செல்வத்திற்கும் உரியவனாகவும் வரவேற்றது. இங்கு இவன் மகிழ்வுற்றான். ஓர் அறிவாளியெனவும் ஆற்றலுடையானெனவும் பெயர்பெற்றான். அமைதியை விரும்புபவன் எனவும் பெயர் பெற்றான். கொரிந்திலிருந்து தீபசிற்கு வரும் வழியில் நடந்த ஒரு செயல் மட்டும் இதற்கு விதிவிலக்காக விளங்கியது. இவன் யோகதாலை மணந்து புதல்வர் புதல்விகளைப் பெற்றான்.

பதினைந்தாண்டுகள் நாடு செழிப்புற்றோங்கியது. ஆயினும் ஏமாற்றமான ஒரு தோற்றப்பாட்டின்கீழ் பொல்லாத ஒரு சீரழிவும் அவமானமும் மறைந்து கிடந்தன. ஈடிபசு தன்னை அறியாமற் செய்த பாவங்களைக் கடவுளர் இனி மன்னிக்கக்கூடியவராய் இருக்கவில்லை. வறுமையும் கொள்ளைநோயும் தீபசை மீண்டும் வருத்தின. இந்நிலையால் வருந்திய மக்கள் மீண்டும் துன்பத்தினின்றும் தம்மைக் காக்குமாறு ஈடிபசை வேண்டினர். ஈடிபசோடு அப்பலோவையும் சேர்த்து வேண்டினர்.

(இதிலிருந்து மன்னன் ஈடிபசு நாடகம் தொடங்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் ஈடிபசு

காட்சி : தீபசிலுள்ள அரண்மனே முன்

அரண்மனே முன்றிலிலுள்ள படிகளிலும் பீடங்கள் மீதும் தீபசுக் குடிமக்கள் பலர் கூடி இறைஞ்சும் பாவனையில் உள்ளனர். நடு வாயிலிலிருந்து ஈடிபசு வருகிருன். ஏவலர் சூழ்ந்துளர்.

ஈடிபசு : மக்காள்! கதுமசு முதுமரபு ஈன்ற
தக்கநற் புத்திளஞ் சேய்காள்! திரண்டுநீர்
வணங்குவதேனே? இணர், தளிர் மாலேகள்
நகரை மொய்த்திடும் நறுமணமும் இன்னல்
அகற்றிடப் பராவல், அழுகுரல் எனுமிவை
எதற்கு? என்தூதர் இயம்பிய உளந்தனில்
பதிக்க ஒருப்படாது, பார்புகழ் பரப்பிய
ஈடிபசு யானே ஈங்கு வந்துளன்
நடந்ததை யறிய. (குருவை நோக்கி)
நலத்திரு பெரியோய்!
அகவையின் பெருமையால் அவர் பொருட்டு இயம்புதல்
தகுமிவண் உமக்கே. தளர்வும் அச்சமும்
தகுமோ? இங்கு நேர்ந்தது யாதோ?
வேண்டிய வாங்கு விஃனசெயல் என்கடன்.
இத்தகை வேண்டற் கியையாது விடுவனேல்
இதயமில் செவிடன் எனவெனைக் கூறுக.

குரு : இறைவா, வேந்தே! எம்மொழி கேட்பீர்,
நாகிளம் சிறுரும் முதுமையின் நலிந்த
கிழவரும் ஈங்கு கெழுமியது கண்டனே.
ஆண்மையில் செம்மையோர் அவரொடு குருமார்
ஈண்டிய யாவரும் ஈங்குளர். இவ்வகைத்
தளிர்களேத் தாங்கிய கிளேஞர் பல்லோர்
அங்காடி மருங்கில் இசுமீன் ஆற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கரைப் பலாசின் இரட்டைப் பலிகொள்
வேதிகை தன்னிலும், வருவது உரைக்கும்
தீதுதீர் புலத்தும் செறிந்துளர் காண்பீர்.
மீள்வழி தோற்றா மாள்வழி, தீயில்
பாழுறும் எங்கள் பட்டின மக்களைப்
பெரும நீர் கண்ணுற்றிருக்கலாம். இறப்போ
இறப்பு! பலன்தர இயலும் மண்ணில்
இறப்பு; கழனியில் இறப்பு. கன்னியர்
சூற்பையில் சிதைவு. சூழ்ந்திந் நகரைப்
பாழ்த்திடும் கொள்ளைநோய் கதுமசுக் குலமுறை
வீழ்த்தி, ஆழ்துயர் அதனால் நிரயம்
நிறைத்திடும். நானும் இச்சிறாரும் எம்துயர்
குறைதமைக் கூறிட உம்மடி உற்றது,
விண்ணவர் நிகர்த்தனை என்பதால் அன்று.
மனிதன் வாழ்வொடு மன்னிய அலுவலில்
அவனின் உயர்ந்ததை ஆட்கொளும் இயல்பில்
மண்ணுறை மக்களுள் முதல்வன் என்பதால்.
கதுமசு தலைநகர் புதிது புகுந்து
கொடிய மதனிகை கயமை உடைத்து,
விடுதலை நல்கிய விறலோய் நீயே!
எம்மவர் குறிமொழி, எதிர்வறிவு, யாதும்
இன்றி இறைதுணை ஒன்றே கலமாய்
நயந்தெமக் கருளி உயிர்புதிது அளித்த
பெருமான் நீயே! புகழும் மாண்பும்
பொருந்தினை ஈடிபசு, பேர்த்தும் உம்துணை
இரந்தனம் பெரும. நரரோ தேவரோ
நல்கும் துணையுடன் நலம்புரிந் தாள்வாய்.
இறந்த காலம் இற்றை அறிவிற்கு
உறுதுணை அளிப்பது உணர்ந்துளோம், எனவே
மாந்தருள் உயர்ந்தோய் எம்நகர் உயிர்பெறச்
சூழ்ந்திடல் உம்கடன், உம்திறல் பண்டைமை
உயர்த்திய தறிந்தோம். பெயர்த்தும் வீழ்த்தவோ
உயர்த்தினை, எனப்பழி உரைக்கவோ, சூழ்ந்தனை.
எம்நகர் புரப்பாய்; என்றும் புலராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நகர் பேணல் உம்கடன் கண்டாய்.
அற்றை நாள் எமக்கு அருள்வளம் நல்கிய
நற்கோள் ஆட்சியில் இன்றும் நமக்கு
இன்னலம் காட்டுவை. இன்றுளவாறு எம்
இறையெனும் நிலையது நிறுவுதல் வேண்டின்
பாழிற்கன்றி வாழ்விற் கரசன்
ஆகுவை, பெரியோய்; அரணெடு நாவாய்
சமைத்துமென்? அவற்றுள் அமைந்தவர் நெஞ்சில்
உரனும் உயிரும் கருகின ஆயின்!

ஈடிபசு: மக்காள் உம்துயர் கேட்டுளம் மாய்ந்தனன்.
நீவிர் படுந்துயர் என்பால் வேண்டும்,
யாவும் அறிகுவன். நீவிர் வருந்த
என்னிலும் வருந்துவார் யாருளர்? உம்மவர்
மனநோ பலப்பல எனினும், அவரவர்
தனியகம் பட்டவை. என்னதோ, என்னகப்
பளுவோடு உம்பளு, என்குடி மன்பதை,
உளத்துயர் யாவும் அழுந்திய பளுவாம்.
துயிலுதல் அறியாது கலுழுமென் நெஞ்சம்,
எண்ணிலி கோடி எண்ணுமென் உள்ளம்,
எனினும் அயர்ந்திலன். நயந்தரும் வினையொன்று
ஏலவே முடித்துளன். என்மொழி என்செயல்
எதுதான் உம்துயர் துடைக்குமென்றறிய
மெனேசியசு மைந்தன் என்தன் கிரயன்
தன்னை அப்பலோ பிதியன் அகம்நான்
அனுப்பினேன் மீண்டிவண் அவன்வரும் நாளிது.
இதுவரை அவன் வராததை நினைந்தென்மனம்
கவலும். ஆயினும் அவன்கொணர் தெய்வ
ஆணை யாதும் ஆகுக. என்குல
மாண்பினுணை முடிப்பன் அதைநான்.

குரு: நன்று சொல்லினை.
(தொலையில் யாரோ வருவதை அவர் காண்கிறார்)
நோக்குக அத்திசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரயன் வருகையை மக்கள் தெரிப்பதை
உணர்க; கிரயனும் உற்றனன் இவ்விடம்.

ஈடிபசு: (பார்த்துக்கொண்டே)
இன்முக மலர்வுடன்; அன்புசேர் அப்பலோ!
அன்னவன் செய்தியால் நன்மை யாகுமோ!

குரு: நன்றது ஆகும். கனிபழம் வேய்முடி
தாங்கிய தவன்தலை. அஃதோர் சின்னமே.

ஈடி: விரைவில் அறிதவம்: அருகவன் அடைந்தனன்.
அரசுச் சோதர! யாது செய்தியோ?
இறைபகர் செய்தியை எமக்கு எடுத்துரைக்க.

கிரயன்: நல்ல செய்தியே; எல்லாம் நலம்பெற
இயலின் நன்மையும் துயர்சேர் செய்கையில்
எழுமே.

ஈடி: விடையினை மொழிக. நம்பும்
பயமும் மாறி மயக்குமே எம்மை.

கிர: யாவர் முன்னிலும் இயம்பெனப் பணித்திடில்
இயம்புவன்; இன்றேல் இல்லுள் இயம்புவன்.

ஈடி: என்னுயிர் இவர் விதி தன்னிலும் பெரிதன்று.
எனவே மொழிகுவை யாவர் முன்னிலும்.

கிர: எனினிது மொழிகுவன். இதுவே மறுமொழி.
எம்மிறை வீபசு ஆணையும் அதுவாம்.
எம்மரும் மண்மிசை எழுந்து தழைத்த
கறையொன் றுள்ளது. கடிந்ததை ஓட்டல்
முறையாம். இன்றேல் மண்ணிதில் கறைமுளைத்
தெம்மையே கொன்றிடும்.

ஈடி: இயம்புக; கறையெது?
செம்மை சேர்த்திடச் செய்ய வேண்டியது
யாதென விளம்புக; ஆவன செய்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இர : நாட்டிற் குற்ற கேட்டின் காரணம்
செந்நீர் சிந்திய தன்மையதா தலின்,
குருதி பொருட்டுக் குருதி. இன்றேல்
நாட்டின் நின்றும் ஓட்டுதல் ஆகும்.

ஈடி : குருதி எனவவர் கருதுவ தியாது?
இறந்தவன் யாரென இயம்பிய துண்டோ?

இர : தலைமை கொண்டெமை நீர் தாங்குமுன், ஆண்டவர்
இலயசு எனப்பெயர் ஏற்றவோர் அரசர்.

ஈடி : அவரைநான் கண்டிலேன். ஆயினும் அறிவேன்.

இர : அவர்கொலைப் பட்டனர்; அறியாக் கொலையதைப்
புரிந்தவன் தனக்கு முறைமை வழங்குமாறு
இறைவன் பணித்தனன்; இதுமிகத் தெளிவாம்.

ஈடி : யாண்டுளன் கொலைஞன்? எண்ணரும் தொன்மையின்
மாண்ட கொலையின் நினைவறு சுவடுகள்
காண்ப தெங்ஙனம்?

இர : காண்பாய் ஈங்கெனக்
கழறினன் இறைவன். தேடுக காண்பாய்.
நாடத் தவறில் காணத் தவறலாம்.

ஈடி : வீட்டிலோ, களத்திலோ, வெளியிலோ, அயலார்
நாட்டிலோ, இலயசு படுகொலைப் பட்டனர்?

இர : 'புண்ணியப் பயணம் கொண்டனன்' என்றவன்
நாட்டைவிட் டேகினன். நாள்பல கழிந்தும்
வீடவன் மீண்டதை நாம்பின் கண்டிலேம்.

ஈடி : நேர்ந்தது பற்றியோர் வார்த்தையு மில்லையோ?
பயன்படு முறையில் இயைந்தவோர் நேர்முக
வழித்துணைச் சான்றும் வாய்க்க வில்லையோ?

இர : பயத்தினில் புலம்பெயர்ந் தோடிய ஒருவனைத்
தவிர யாவரும் ஒழிந்தனர். அவனும்
ஒன்றைத் தவிரவே றொன்றும் கூறிலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி : அதுதான் யாதோ? ஒன்றை ஓர்ந்திடில்
எத்துணைச் சிறிய உளவே ஆயினும்
அதனைத் தொடர்ந்துநாம் அனைத்தையும் அறியலாம்.

இர : மன்னன் மக்களைப் புன்னெறிக் கள்வர்
கொன்று வீழ்த்தினர் என்பதே அவன்மொழி.

ஈடி : இத்தலத் துள்ளார் நிதிகொடுத்து ஏவின்
அல்லால் இத்துணைப் பொல்லா வினையினை
ஆற்றல் கூடுமோ ஆறலை கள்வர்க்கு!

இர : அவ்வுரை கேட்டுளோம். ஆயினும் தொடர்ந்த
எவ்வம் பலவுளும் எவரும் கொலைஞரைப்
பழிகொள வந்திலர்.

ஈடி : அளவிலா எவ்வம்!
அரசுக் கொலையை அறுதியாய் உசாவலை
தடைசெயும் தகைமை உடையரும் உளரோ?

இர : புரியா மறைகளில் புத்தியை விடாது
உரிய அலுவலில் உடன்மனம் கொள்ளுக
என்றே சிபிஞ்சும் தன்பெரும் புதிர்களால்
தூண்டிய தெம்மை.

ஈடி : மீண்டும் புதிதாய்
இம்மறை வெளிப்பட இடையறுது உழைப்பன்;
எம்மிறை வீபசு வாழ்க! நன்றிநின்
அருவினை குறித்தே. இறந்தவர் கடனறி
வுறுத்திய உன்றன் நற்பணி சிறந்தது.
இறைபணி, நாட்டின் பொற்பணி, யாவினும்
உன்றுணை யாக உழைப்பன் உவந்தே.
பணியது எனதுமாம். புறத்தவர் மாட்டமை
மாசது அன்றியும், என்னகந் தொட்ட
தீதுமே தீர்ப்பன்நான். இலயசைத் தீர்த்தவன்
எனவே, அன்னவன் என்னையும் தீண்ட
எண்ணுவன் அல்லனோ. எனவே இலயசின்
பணியென் பணியுமாம். நன்றென் மக்காள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவீர், கொடிகுழை களைவீர், கதுமசுக்
குடிமகார் இங்கே குழுமச் செய்வீர்.
அன்னவர் வேண்டிய தனைத்தும்நான் செய்வேன்,
என்றவர்க் கியம்புக. இறையருள் அதனால்
இயலுமெம் வாழ்வு. இல்லையேல் வீழ்வே.
(ஈடிபசு அரண்மனையுள் செல்கின்றான். மக்களையழைக்கத் தூதுவன் செல்கின்றான். குரு விண்ணப்பம் செய்தோரை அகற்றுகிறார்.)

குரு : எழுவீர் மக்காள் விழைந்தவை யாவும்
அளிப்பன் என்றெம் அரசன் உறுதி
கூறினன். செய்தி கூறிய வீபசே
எழுந்திவண் வந்தெமைக் காக்க வழுத்துவம்.
(மக்கள் கலைகின்றனர். தீபசு நாட்டு முதியோர் குழு வரல்.)

குழு : ஒளிநகர்த் தீபசின் பிதியன் பொன்மனை
கிளர்ந்தெழும் கருணை விண்ணொளி கேட்டோம்.
எம்மகம் பயத்தால் ஏக்குறும்,
வருவது நினைந்து மலைத்திடும்.
தெலோசின் புரவல, செவிகொளீர் எம்மொழி.
அலைக்குமே அச்சம் ஆருயிர் தன்னை.
எம்மை நீர் காக்க என்செய்வீர்! அரசே!
புதியது முயல்விரோ, அதுதான் ஒழித்து
சுழலும் ஆண்டுபோல் பழையது முயல்விரோ!

அழியா நம்பின் அரும்பெரும் புதல்வி!
இழிவே இல்லா மொழியோய்! முதல்வி!
சூசின் முதற்பெரும் செல்வி, அமர
அதினா! நின்னையே அழைத்தனம். நின்னொடு
உன்னரும் மாண்புற எம்நகர் அமர்ந்த
உன்னரும் சோதரி ஆட்டமி தன்னையும்
வில்லிறை வீபசு தன்னையும் வேண்டினம்.
பண்டுநின் முப்படி பலத்தை விளக்கினாய்;
இன்றும் மீள நின்பலம் காட்டுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை, தீத்துயர்க் கொடுமை நீக்கி
விழுமிய வாழ்வு நல்குவாய்.

சொல்லரும் துயரம் சூழ்ந்தெம் மக்களை
வெல்லரும் பிணியில் வீழ்த்துதல் காண்க.
மருந்துகாண் கதியிலும் வருத்து மந்நோய்.
விளைவறு கழனியில் பழுதுறு கொள்ளை;
மலட்டு வயாவின் அலறல் ஒருபுறம்;
காட்டுத்தீயில் கனென்றெழும் உயிரெலாம்
பாழிருள் பாயும்.

புகலரும் பாங்கினில் நகர்த்தெரு யாங்கணும்
சாநடம் புரிந்தே சாப்பல விளைக்கும்.
மாநகர் மக்கள் மாள்தலைக் கண்டு
புலம்புவார் இலரே; இயல்பல ஆலயம்
அன்னையர் தொழுவர்; பொன்னுளம் படைத்தோய்,
புண்ணிய அதினு! கண்ணீர் அரவம்
காதில் விழலையோ! கடிதில் வருவாய்.
மாசில் அப்பலோ! மாய்க்கும் எம்துயர்
கேட்பாய், கடிவாய்;

கேடுர் வெண்கல
ஒலிச்சமர் இல்லையே எனினும், சாப்பேய்
அலமரச் சமர்மிக ஒலிப்பது காண்க.
தொலைகடற் படவோ, இல்லையேல் யாதுமோர்
பாழ்குடாப் படவோ படைக்கலம் அனைத்தையும்
வீழ்த்துக. பெரும் சூழிருள் படர்நோய்
துன்பப் பகலெனத் தொடருமே. சூசு!
நின்னிடி வாட்டுக, மின்னல் கொல்க!
இலிசயன்! நின்பொன் வில்லினுல் கொல்க.
இலிசியன் மலையிடை இயங்குநல் ஆட்டமி!
கொல்க, அவனை.

மயனுட்டுக் களியினில் மாண்புற ஆடிடும்
பக்கசு எங்கோ! பங்கமில் யுவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைமை முற்றிய சாவின் தேவினை,
கடவுளர் யாவரும் கண்கொள வெறுக்கும்
கொடிய பகைவனை, கொல்லநின் தீவளர்
தூளினை ஒச்சுக.
(அரண்மனையிலிருந்து ஈடிபசு வரல்)

ஈடி : வணங்கினீர். நன்று, பணியென தேற்று
உம்மிடி களைவதற்கு உவந்த உறுதுணை
அமைவொடு எனக்கு நீர் அளிப்பி ராயின்,
வேண்டிய வாய்க்கும், விடுதலை இன்பொடு.
அயலான் ஒருவன் இயம்புதல் போன்றது,
என்மொழி. நடந்ததும், என்செவி வீழ்ந்ததும்,
கேட்டவாறு மொழிகுவன் ; குறியோன் றின்றியென்
வேட்டையில் சிறுபுலன் வாய்ப்பதும் அரிதாம்.
ஆதலின் தீபநாட் டறிவீர் உம்மிடைப்
புதுக்குடி புகுந்த பெற்றியன் முறையில்
இதுவொன் றுரைப்பன். இலபகசு ஈன்ற
புதல்வன் இலயசை வதைத்தோன் யாவன்
என்பதை அறிவிரேல், என்னிடம் இக்கணம்
யாவும் கூறுவீர். *(சிறு ஓய்வு)*
எவர் தம் அகத்திலும்
பாவம் படிந்துள தாயின் அன்னவர்
அடிபணிந் திடுதல் அமைவுடைத் தாகும்.
உறுதுயர் அதனால் குறையும் ; நாடகல்வு
அதனினும் மிஞ்சா விதியவர் தண்டனை.
பிறதுயர் அவரை வருத்தா தாகும்.
(கேட்போர் மௌனம்)
கொன்றவன் புறத்தவன் என்பது தெரிவரின்
கூறுவீர் உறுதியாய் ; கூறுவான் என்மனம்
கனிந்த பரிசோ டின்றிவண் கூடினோர்
நன்றியும் பெறுவன்.
(மீண்டும் அமைதி)

அன்றிப் பயந்தனுல்
பிறரையோ உம்மையோ மறைக்க ஈங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூங்கையாய் நிற்பிரேல், மறைவு விலகவும்
மரணமே கிடைக்கும்; மனதிற் கொள்க.
அன்னவர் யாவரே ஆயினும் என்றன்
ஆள்புலம், அரசெலாம் கேண்மை, தஞ்சம்
அளியா தொழிக; அவிப்பலி, வந்தனை,
ஒளிவிழா, யாவினும் கெழுமையும் ஒழிக.
உரையோன் பீதியன் உறுகோட் கியைய
பெரும்பழி தொடர்க; பதரவன், கொடியோன்!
இல்லெலாம் அவனை விலக்குதல் கொள்க.
இவ்வழி இறைவர்க்கு, அவமே இறந்தார்க்கு,
என்கடன் ஆற்றுவன்; எவருமே அறியாக்
கொலைஞனும் அவன்துணைக் கயவரும் தம்வினை
பொருட்டு வாழ்வெலாம் உறுதுணை இன்றிப்
பெரும்பழி அழுந்த இறைவனை வழுத்துவன்.
இத்தகைப் பழியினில் என்னையே நீக்கும்
சித்தமும் இல்லேன்; என்னகம், மனைதான்
குற்றம் இழைத்தவற் கடைக்கலம் கொடுப்பின்,
மற்றவர்க் களித்த மறவுரை யாவுமென்
தலையிலும் வீழ்க. தவரு திப்பிணி
தலைமேற் கொண்டு தெய்வம், கடும்பிணி
கொண்டுழல் எம்நாடு, உம்மரசு, இவைக்குப்
பணியென இப்பணி போற்றுதல் உம்கடன்.
விண்ணிடு கட்டளை வரும்வரை, வாளா,
தீதறு தவப்பிணி தவறிய தறிந்து
வேதனை கொண்டேன். மேதகு மன்னன்
உங்கோன் மறைவின் உண்மையைத் துருவுதல்
என்கடன்; இயல்வரை இதுபணி தொடருவன்.
நன்று. எவ்வாறுயினும் ஆகுக;
இன்று வேந்தர் உய்த்த அரசு
கட்டில் மனையிட்டு கட்டளை யாவும்
என்னவை யன்றோ! அன்னூர் மக்களும் —
என்னையும் அவரையும் இனத்தாற் பிணிக்கும்
இன்ப இணைப்பென இறையருள் கூடி
உயர்தலும் சாலும். அத்தகை ஐயற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்ததே அழிவு. நெஞ்சம் பொறுக்குமோ?
என்னையன் சார்பாய் எவ்வாறு உழைப்பனோ
அன்ன வழியில் அயரா துழைப்பன்.
வலிமிகு அசுனரின் கதுமசுக்குலமுறை,
பொலிதரசு மைந்தன், இலகபசு தோன்றல்,
இலயசைக் கொன்ற ஈனனைப் பிடித்துக்
கொலைப்பழி தீர்த்தல் குடிமகார் கடனும்.
இப்பணி தவறின் இறைபழி சாரும்.
இப்புவி வினைபயன் இவர்க்குப் பொய்க்கும்.
மனைவியர் இவர்க்கு மலடாய்ப் பொய்ப்பர்.
இன்றுள இவ்விடர் இதனிற் பெரியவை,
தொடர்ந்து சாவரை அடுமே அவரை.
இன்னுமென் துணையாய் எஞ்சிய கதுமசுக்
குலமகார்! இறையருள் சார்ந்துமைக் குன்று
நலமே சேரும்.

குழுத்
தலைவர்: நானிதிற் கூறுதற்
கொன்றிலை மன்னவா! உன்றன் ஆணையால்
மனந்துணிந் தொன்று மொழிகுவன். குறித்த
மனிதன் நானலன். அன்னவன் யாரென
அறியவும் மாட்டேன். குறித்த கேள்வி
எழுப்பிய வீபசே, யாவ ருள்ளும்
பழிசெய் பாதகன் பற்றி அறியும்.

ஈடி: உண்மை. ஆயினும், உள்ளம் இசையா
விண்ணவர் தம்மை வலிந்து யாதும்
மொழிய வைப்பதும் மன்னவர் வலதோ.

குழு: மொழிகுவம் ஒன்று கேட்பாய்.

ஈடி: மொழிக;
தெளிவுறச் சிந்தித்துத் தெரிப்பவை யாவும்
கொள்வேன் உளத்தே.

குழு: கேட்டுளம் மகிழ்ந்தோம்.
வருவது கூறும் வண்மையின் சீரியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைரேசியசு, விபசின் செம்மைக்கு அடுத்தவன்.
அருந்துணை எம்பணிக் கன்னவன் புரிவான்.

ஈடி : தெரிந்தே இங்கவன் வருமாறு, தூது,
கிரயன் அறிவுரை கேட்டு, விடுத்துளேன்.
இருமுறை விடுத்தும் இன்னும் அன்னவன்
இதுவரை வராத அதிசயம் அறிந்திலேன்.

குழு : பலபல வதந்திகள் பரந்த துண்மையே ;
பழைய நீலியர் விழல்கதை அவைதாம்.

ஈடி : வதந்திகள். எத்தகை வதந்திகள், விளம்புக.

குழு : வீதியிற் செல்கையில் யாதிகர் கொன்றனர் ;

ஈடி : என்றோர் ஊர்மொழி யானும் கேட்டுளேன்.
எனினும் சான்றுகள் எங்கும் கண்டிலேன்.

குழு : தனக்குநேர் கட்டுரை தெளிவுற அறிந்தும்
மனங்கொளா, நடுக்குறு மனிதனும் உண்டோ !

ஈடி : செய்கைக் கஞ்சான் சொல்லிற்கு அஞ்சுமோ !

குழு : அவனை அறியும் அறிவன் உளனே.
எவரினும் ஏற்றம் வாய்த்தநல் வாய்மையோன்
அவனை மக்கள் அழைத்திங் கடைவர்.
(குருவுடன் தைரேசியசைப் பணியாள் அழைத்துவரல்)

ஈடி : நின்புலன் தப்பியது ஒன்று மில்லை
என்பதை அறிவோம். என்றும் உன்னகம்
திருவொடு, பாழ்சேர் பெருங்கதை, விண்மண்
பொருந்திய அறிவு, பொலிந்தது அறிவோம்.
கண்ணிணை தவறினும் கருத்துளம் காணுமே
எங்கள் நிலைமை ; எம்மவர் காப்பெனத்
துணையென உம்மையே கொண்டனம் ; வீபசு
தமக்கு நேரே எம்மொழி அனுப்பி
மறுமொழி பெற்றுளோம் ; மற்றையோர் உமக்கிதை
உணர்த்தி இருப்பர். உணத்தும் கொள்ளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்ய ஒருவழி இலயசை வதைத்த
கயவனைக் கொல்லல்; இயலா தென்னில்
நாடு கடத்தல். நற்புட் குறியோ,
கூடு வேறு குறிபல தம்முள்
வருவது உரைக்கும் வலமெதோ, அதனைத்
திறம்பட ஆள்க. உறுபலன் உமக்கும்
எனக்கும் தீபசு தனக்குமாம். எல்லேம்
உமக்கே தஞ்சம். நேர்ந்த சாவினுல்
கறைகொள் அனைத்தையும் காப்பது உம்கடன்.
இறைஞ்சினேம் உம்மையே இறையென; ஒல்லும்
திறனுல் மன்பதை புரத்தலே மனிதனின்
ஆன்றநற் பணியாம்.

தைரேசியசு: அறிவுடை மொழிகளே.
ஆன்ற அறிவினுல் ஆழ்பயன் இல்லெனின்,
அறிவுடை மக்கள் அருந்துயர்ப் படுவரே.
நெறியிதை மறந்தேன். நன்றிதை யாரே
அறிந்தார்! இவண்நான் அணைந்தது பெரும்பிழை.

ஈடி: உறுதுணை உம்மிடம் சிறிதும் நாம் பெற்றிலம்.

தைரே: என்னகம் சென்றிடின் இருவர் சுமையும்
இனிதே தணிந்திடும். நன்மையும் கூடும்.

ஈடி: தீபசின் மகன்நீர்; துணைசெயத் தவறுதல்
ஆபத்தாம். பகைமையால் ஆம்பயன் யாதோ?

தைரே: தங்கள் மொழிகள் தீங்கு விளைப்பது
கண்டு, காக்க நா கொண்டனன் உள்ளம்.

ஈடி: அறிந்த துளதேல் மறுக்கா துரைக்க.
வேண்டினோம், தேமேல் ஆணை; உரைப்பீர்.

தைரே: மாயிருள் மறைத்ததும் மதியை. என் ஆழ்மறை
வாய்விட் டறையேன். உம்மறை வாய்விடேன்.

ஈடி: அறிந்தது நவிலாது மறைத்து, நம்மைப்
பிழைத்து, நகரையும் வீழ்த்த எண்ணினை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைரே: உன்னையும் என்னையும் உய்ப்பதென் நோக்கம்.
வினவற்க ஒன்றையும். விளைபயன் ஒன்றிலை.
விளம்பேன் ஒன்றும்.

ஈடி: விளம்ப மாட்டாய்!
கயமைதோய் போக்கிரி! கல்லையும் சினக்கச்
செய்வோய்! ஒரு மொழி செப்புதற் கிலையோ?
இறுதி வரைக்கும் இயம்பா திருக்க
உறுதி கொண்டனை!

தைரே: உரையேல் அம்மொழி.
உன்னகம் சீர்பெற உரியன புரிவாய்.

ஈடி: என்ன இழிமொழி! அரசிற் கிவ்வசை.
சால்பையும் சினக்கச் சூழும் புன்மொழி.

தைரே: நேருவ நேரும்; நெஞ்சு திறந்துநான்
கூறுதிருப்பினும்.

ஈடி: நேருவ தெதுவோ,
ஓர்ந்ததைக் கூறுதல் உன்கடன்.

தைரே: வஞ்சினம்
கொண்டுநீ சீறினும் கூறிடேன் ஒன்றும்நான்.

ஈடி: சீறுவன் உண்மை; சிறிதும் மறையாது
கூறுவன் மனத்துளது. செய்கையில் பங்கிலை
எனினும், சூழ்ந்து வினையிதை முடித்ததில்,
உன்பணி பெரிதே. உன்னிரு விழிகளும்
இன்றும் காணும் தன்மை யுடையன.
எனினுநின் கைகளே அன்றிப் பிறஇவ்
வினைதனை முடிந்திரா என்றுநான் அறைகுவன்.

தைரே: நல்லது; கேளினி! நின்நாப் பொழிந்த
எல்லாச் சாபமும் ஏறுமுன் தலையினில்
என்பதை ஓர்வாய். இன்னும் என்னுடன்
அன்றியும் இங்குளார் அனைவர் உடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் எதுமொழி தன்னும் புகலேல்.
என்னே ! தவஞ்சேர் இந்நாடு அழிந்து
பொன்றக் காரணம் புன்மைசூர் நீயே !

ஈடி : நாணமற்று வீண்மொழி நவின்றனை.
சாரும் பலனில் தப்புதல் சாலுமோ ?

தைரே : சாலும் ; என்வாய்மையே சால்புடைக் காப்பு.

ஈடி : யார்வினை இது சொல் ; இதுவோ குறியுரை.

தைரே : ஆர்விலா திவ்வுரைக் காரணம் நீயே.

ஈடி : மீளவும் மொழிக, பிழையதில் தவிர்க.

தைரே : தெளிவிலை என்மொழி ! தொடர்ந்தெனைத் தூண்டவோ.

ஈடி : புரைதீர் உண்மையே பெரிதும் வேண்டுவன்.

தைரே : உரைப்பன் உண்மையை ; உழன்றுநீ தேடும்
கொலைஞன் நீயே. இலையிதில் ஐயம்.

ஈடி : இருமுறை தீச்சொல் இயம்பிநீ தப்பவோ !

தைரே : நின்சினம் கொழுந்துற இன்னும் கூறவோ !

ஈடி : நன்றுநின் புன்மதி நவில்க யாவும்.

தைரே : அறியா மடமையில் அன்புடை யாரோடு
அறங்கொல் இன்பத் தமர்ந்துநீ வாழ்வதை
அறிவையோ ? அறிவன் நான்.

ஈடி : அறிவிலா வசைபல
இயம்பியும் தப்பலாம் என்பதுன் எண்ணமோ ?

தைரே : உய்யலாம். உண்மையின் உயரரண் உள்ளதோ ?

ஈடி : உண்மைதான். எனினும், உனக்கது இல்லை.
கண்ணிலி, நாண், மதி, கருத்திலி, புன்பதர்.

தைரே : உன்பால் இரங்கினன் ; புன்மொழி பகர்ந்தாய் ;
உன்பால் ஒருநாள் உலகிவை மொழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி: அழியாப் பேரிருள் தழீஇய கேடீ.
உன்னால் ஒளிவாழ் என்னைப் பிறரை
உறுத்தல் சாலுமோ?

தைரே: உன்னை வீழ்த்தும்
அறமென தன்றுகாண்; அப்பலோ பணியது;
தவரு தவன்நிறை வேற்றுவன்; அறிவாய்.

ஈடி: *(கிரயனின் தூதனை இச்செய்தியோடு இணைத்து)*
உன்றன் சூழ்வோ அன்றில் கிரயனின்
சூதோ?

தைரே: கிரயன் ஏதும் அறியான்,
உன்பகை நீயே.

ஈடி: *(தன் சிந்தை சென்றவாறு)*
நன்றுன் சொற்கள்.
வாழ்வெனும் இகலில் அரசிறை, செல்வம்
மதியொடு மதி, என்றும் நிதம்பகை பொருமை
யொடுபொரல் வேண்டுமோ? நெடுநாள் நண்பன்,
அரும்பெறல் அன்பன், கிரயன், கரந்தெனை,
வீழ்த்தியான் வேண்டாது இந்நகர் அளிபதம்
அழிக்க முனையவோ? பழுதூர் மாந்திர
வித்தை பகர்ந்திடு பித்தன், பயன்பெறின்
நயம்பெற விழிப்பன்; நயக்குறி உரைப்பதில்
நயனம் அற்றவன். *(தைரேசியசை நோக்கி)*
நல்லது உன்குறி.
சொற்கலை நல்கிய அற்புதம் யாதோ?
அந்நாய் முகப்பேய் இவணுறை போழ்துநீ
என்ன செய்தனை? எம்மவர் உய்யவோர்
நன்மொழி அற்றதோ உன்வயம்; பொதுமதி
அளப்பரும் மறையொன்று உளதிவண், ஓர்ந்ததன்
விளைவினை விளம்பலோர் அறிவன் பணி; எனின்
மறைதீர் பணிநீ புரிந்திலை; தேமொழி
புட்கலை வாளா கிடந்தன; இறுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் மடஞ்சேர் ஈடிபசு வந்திவண்
புட்கலை விட்டு, இயல் புத்தி யோடுஉண்மை
அறிந்து, வஞ்சகன் வாயை அடக்கினன்.
கிரயன் பின்அரசு கிட்டும் என்றவோர்
கருத்தொடு அன்னவற் கழிவு சூழ்ந்தனை.
ஏதிலான் மேற்பழி ஏற்றும் உம்மவர்
சூதிற்கு உழலுவீர். தோன்று மாறு,
வயதிலை ; ஆயின்உன், கயமை உணர்வகை
தண்டம் வாய்த்திடும்.

குழு : தங்கள் சினத்தினால்
பண்பிலா மொழிபல பகர்ந்துளீர் ; இறைவன்
ஆணையை யாவரும் பேண முயல்கையில்,
நன்றல இம்மொழி.

தைரே : மன்னன்நீ ஆயினும்
மறுமொழி கூறும் பேறெனக் குண்டுகொள்.
இங்கிலை எம்மை இணைநிகர் ஆக்கிடும்.
உனக்கன் றென்பணி. உலொட்சிய சிற்கே.
கிரயனுக் கும்பணி புரிகடன் எனக்கிலை.
குருடென இகழ்ந்தனை, பெருமகிழ் வுற்றனை.
கண்ணுளாய் எனினும் கண்டிலை சூழ்ந்துனை
நண்ணும் பாழினை. கண்ணுளாய் எனினும்
சூழ்ந்த தோழமை தேர்ந்திலை, அறிந்திலை.
யார்மகன் நீயென ஓர்ந்தியோ ? மண்ணுளார்
மறைந்தவர் யார்க்கும் புரிந்தனை பாபம்.
எனினும் உணர்ந்திலை நின்பிழை ; உன்றன்
அன்னையும் அப்பனும் அளித்தநற் சாபம்
இருமருங் கிலுங்கூர் பொருந்திய வாளென
மண்ணி லிருந்துனை மறைத்திடும். இன்று
தெளிந்த கண்ணொளி அழிந்திருள் கவ்விடும்.
உன்பேர் ஆர்வின் தனிப்பெரும் துறக்கம்,
என்றுனை எழில்பெற மனையகம் படுத்திய
இன்ப மண இசை தன்னின் உண்மையை,
உன்னரும் பெருவசை தன்னுடன் உணர்கையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னி நீஅறிவாய் உன்னை. எந்தை
என்பார் யாரென ஓர்வாய்; அன்றுநீ
ஓல மிட்டழும் ஓசையை ஞாலம்
முழுவதும் கேட்கும்; எழுமே சிதரனின்
திசையெலாம் எதிரொலி. சிந்தைகொள் வாறு
வசையினை என்மேல் வாரிநீ வீசுக;
கிரயனைக் கனன்று பெரும்பழி சுமத்துக;
என்நா அசையிலோ என்றும் மானுடம்
காணுக் கீழ்மைசேர் வசையுடன் வீழ்வாய்.

ஈடி: இன்னும் இம்மொழி என்செவி வீழவோ?
என்முன் தவிர்க! எங்கிருந்து வந்தையோ
அங்கு செல்க; அகல்க இக்கணம்.

தைரே: இங்கெனைக் கொணர்ந்தது உனிச்சையே எனதன்று.
ஏகுவன் இக்கணம்.

ஈடி: எத்தகைப் பிதற்றலை
ஏற்க வேண்டும் என்பதை அறிந்தால்
பொல்லா இவ்விடர் எல்லாம் நான்தவிர்த்
திருப்பேன்.

தைரே: பிதற்றலாய் இருக்கு மென் மொழியுனக்கு.
உன்றன் பெற்றோர் அவ்வுரை ஏற்கார்.

ஈடி: என்ன கூறினை! என்தாய் தந்தையர்
என்னைப் பயந்தவர் எவரோ?

தைரே: இன்றுதான்,
உனது பிறந்தநாள்; இன்றே உன்சா
நாளுமாம்.

ஈடி: இன்னும் நவில்வதை நொடியாய்க்
கூறல் வேண்டுமோ ஐயனே!

தைரே: நொடிதீர்
ஆற்றலில் உலகெலாம் போற்றும் பெரியோன்
அல்லனோ நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி : என் வல்லமை வாய்த்தநற்
கொடை. அதைக் குறித்துநீ கேலி செய்வதா?

நைரே : கொடையா? உன்குலக்கேடும் அழிவும்
அல்லவா!

ஈடி : கவ்வை இல்லையே. மீளாப்
பாழுற்ற நாடிதைப் பாது காத்துளேன்.
ஆழ்ந்தவோர் இன்பம் ஆகங் கொண்டுளேன்.

நைரே : ஏகுவம் இல்லம். கைகொடு சிறுவ.

ஈடி : மற்றை நும் துணை எற்றுக் கெமக்கினி?
சிறுவன் துணையொடு சேர்க நும்மில்லம்.

நைரே : உன்னால் எனக்குறும் இன்னலை நோக்கி
நெஞ்சம், குலையாது நேர்முகம் நோக்கி
கூறவேண்டிய கூறிய பின்னர்!
யார்பொருட்டு ஆரவாரம் செய்தனை,
அன்னவன், இலயசைக் கொன்றவன், இங்குளான்.
அன்னியன் போலிங்கு அவன்குடி கொண்டுளான்.
எனினும் தீபசில் தோன்றினோன் என்பதை
உலகம் விரைவில் உணரும். அவனின்
வலியும் அழியும்; கண்ணோடு இங்நாடு
புகுந்தவன், கண்ணவிந்து அயற்புலம் ஏகுவன்.
மிகுதனம் இன்றவன் வகிப்பினும், ஆகுவன்
நாளைபேர் ஆண்டியாய். நீள்தடிக் கையொடு
நெறியெலாம் துழாவிப் புறப்புலம் பெயர்வன்.
சிந்தை குடிகொள்தன் செல்வப் புதல்வனின்
தந்தையும் உடன்பிறப் பாளனு மாயவன்,
தன்னைப் பெற்றவள் தலைவனு மானவன்,
தந்தையைக் கொன்று அவன், தானம் கொண்டவன்,
என்பதை, உலகம் இனிநன் குணரும்.
சிந்தைகொண் டிப்பொருள் ஆய்க; செல்க;
அந்தகன் என்க என் ஆன்றசொல் பொய்யெனின்.
(யாவரும் செல்லல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : தெல்பி மலையுறை தெய்வக் கனைகுரல்
வல்லை கடியுதே, செந்நீர் சொரிந்திட்ட
கள்ளக் கொடுவினை யாளனை !
யாரவன் ?
பரிவேகம் கொண்டு பவனத்தைச் சாடிப்
பறந்தாலும் சூசு சேய்எரிமின் பூண்டு
விரைந்தோடி வந்து மடித்திடும்.
பொய்யாக் கதியொடு பாயும் விதியும்.

பாணசின் மேலொங்கு பனிஒளிர் குன்றகம்
சேணின் றொலித்தது, செய்வினை சூழ்ந்தானைக்
காரிருள் கீழ்ந்து கொணர்கென.
யாண்டவன் உள்ளான் ?
காட்டியல் கானூ குகையிலோ கானிலோ
கட்டின்றிக் குன்றில் குலாவும் எனினும்,
கேடிலாக் கூவல் அவன்காதில்
நீடொலிக்கும்.
ஆழ்புவி நெஞ்சொலி ஆர்க்கு மவற்கெதிர்.

அறிவன் கொடிய உரைத்தனன், உண்மை.
அறிந்திலம் வாய்மை; மறுக்கவும் மாட்டோம்.
எல்லாம் இருள்மயம்; எம்முள் உறுவதைப்
புலங்கொளோம், ஆயின் பயமே கொள்வோம்.
இலபகசு மனைக்கும் பொலிபசு மனைக்கும்
இகலெது வேனும் இருந்த துண்டோ ?
புலன்படா மரணம் பொருட்டாய் ஈடிபசு
புகழ்க்கொரு வசைமொழி பொழிதலும், இலபகசு
அகமனை மேற்சினம் கொளலும், அழகல.

அவனியின் மறையெலாம் அப்பலோ சூசு
தவறுதறியும்; புவிவளர் அறிவருள்
ஒருவரில் அடுத்தவர் அறிவர் எனுமொழி
பொருந்துமோ ? எவர்க்கும் புகழ், மதி படிப்படி
அமைந்தவை. நிறுவுமுன் அவப்பழி சுமத்திலேன்.
சிறையுடை மதனிகைச் செருக்கினை அழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைபுகழ் அணிந்தவன், அரும்பெறல் மகனெனக்
கருதுதல் தவிர்ந்து பிறவழி கருதிலேன்.

(கிரயன் வருதல்)

கிர : பெருங்குடி மக்காள்! அரசன் ஈடிபசு
என்மீது அவப்பழி ஏற்றினன் என்றோர்
புன்மொழி கேட்டனன்; பொறுக்கிலன் அம்மொழி.
பேரிடர் சூழ்ந்தவிந் நேரம், மெய், மொழி,
எதுவகை யானும் சதிசெய் தனனெனும்
வசைமொழி கேட்கும் வாழ்விது வேண்டேன்.
வாழ்விதோ நீண்டது; வசையின் நிலைப்பதால்,
பாழ்த்தது; ஊழ்த்தது பாதகன் என்றெனை
நாட்டவர் நட்டவர் சாட்டுரை பகர்வதால்.

குழு : வாய்மொழிந் திட்ட வார்த்தைகள் கோபம்
பாய்ச்சிய பிறழுரைப் பண்பின.

கிர : அறிவன்
என்னுரை ஏற்று இயம்பினன் பொய், என
அன்னவன் கூறினன் அல்லனோ?

குழு : கூறினன்;
என்ன நோக்கொடு இயம்பினன் அறியோம்.

கிர : எனக்கெதிர் இயம்பிய ஏதச் சாட்டு
உளத்தீர் புடன்ஒரே ஓர்புடன் அரசர்
கிளந்தது தாமோ?

குழு : அளந்தென் தலைவர்,
ஆள்வினை ஆய்பவன் அல்லன்நான்; அதோஅவர்.

(ஈடிபசு வரல்)

ஈடி : வாழ்கநீர் ஐய! வரவிவண் அளித்த
காரணம் யாதோ? என்குடி கவர்ந்தென்
ஆருயிர் போக்க, ஆய்ந்து சூழ்ந்தும்
என்முகம் கொண்டுநீ என்மனை நண்ணினை?
புன்மதி, பேடி என்றெனை எண்ணியோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ச்சி கோலலைத் துலக்க, கண்கள்
வீழ்ந்த, கடிமதி வேண்டும் அரசர்க்கு
என்பதுன் எண்ணமோ? என்ன சூழ்ச்சி!
புன்மைப் படைப்பு; பொருளும் நண்பரும்
இன்றிநீ இறைபதம் இச்சித் துழல்தல்.
மன்பதம் கொள்பவை மன்பதை, பொருளே.

இர: என்மொழி கேட்டபின் உன்முடிபு கொள்க.

ஈடி: உன்நா வலமெனக்கு உறுத்தா தறிவு.
என்பகை தம்முள் வன்பகை நீயென
நன்றுநான் அறிவன்.

இர: ஒன்று மொழிகுவன்;

ஈடி: இயம்புக எதையும் மெய்யன் நீயெனும்
ஒருமொழி தவிர்த்தே.

இர: ஒரு தலைக் கோளால்
நயமுனக் கேதும் எய்தும் என்றுநீ
கொள்ளல் ஆகுமோ.

ஈடி: குலத்தினுக் கெதிராய்க்
கள்ளச் சூழ்ச்சிகள் கணித்து நடாத்தியும்
தண்டனை தவிர்த்தும் தப்பலாம் எனமனங்
கொண்டனை.

இர: அவ்விதம் கொள்ள நானோர்
பித்தனோ; நிற்க, பிழைநான் என்ன
செய்தனன் என்றுநீ சிந்தை கொண்டனை?

ஈடி: சூதக அறிவனைச் சூழ்ந்துநான் அழைத்திட
ஏதுவாய் நின்றவன் இங்கெவன்?

இர: அதுநான்;
இயலும் எனில்நான் இன்னும் அதையே
செய்குவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி : உண்மையைச் செப்புக எவ்வாண்டு
இலயசு,

கிர : இலயசா ! ஒன்றும் விளங்கிலேன்.

ஈடி : இலயசு மறைந்தின்று எத்துணை காலம்?

கிர : பல்லாண்டு ஓடின. சொல்லில் அடங்கா.

ஈடி : அன்றுமிக் கிழவன் தன்தொழில் பயின்றனன்!

கிர : இப்புகழ் அன்றும் இருந்தது அறிவற்கு.

ஈடி : அற்றை நாட்களில் அறிவன் என்னைப்
பற்றி ஏதும் பறைந்ததுமுண்டோ?

கிர : என் செவி விழுமாறு ஒன்றும் இல்லை.

ஈடி : இறப்பிது பற்றி ஏதும் உசாவி
அறிந்த துண்டோ?

கிர : அறிந்த தொன்றிலை.
உசாவொன்று நடந்தது உண்மையே ஆயினும்.

ஈடி : பண்டிவ் வறிவன் பூண்டதேன் மௌனம்?

கிர : அளவிற்கு மிஞ்சிப் பிறசொல விரும்பிலேன்.

ஈடி : அறிந்துளாய் யாதோ; உரைத்திடல் இங்கதை
அறிவுடைச் செயலாம்.

கிர : அறிந்ததை உரைப்பன்
மறையாது; ஆயின் அறிந்தது யாதோ?

ஈடி : அறிந்தது இதுவே; அறிவன் என்பான்
இலயசைக் கொன்றவன் எனும்பழிச் சொல்லென்
தலைமீது சுமத்தத் துணிவனே, சூழ்ந்த
உன்னூரக் கின்றேல்?

கிர : உண்மையும் பொய்யும்
உன்னுளம் அறியும். ஒன்றுநான் கூறுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனை நீ வினவினுய்; ஏற்ற முறையில்
உன்னை வினவ அனுமதி அளிப்பாய்.

ஈடி : நன்றே வினவுக. குருதிக் கறையினன்
என்றென் மேற்குறை ஏற்றுதல் எளிதன்று.

கிர : என்னுடன் பிறந்தாள் தலைவன் தாங்களோ?

ஈடி : இனியநற் பேறது எனதே.

கிர : அன்னவள் உடைமை அரசிறை இரண்டிலும்
மன்னர்க் கொத்த மதிப்பிற்குரியவள்.

ஈடி : விரும்புவ யாவும் உரிமையில் அவட்கே.

கிர : அடுத்து எனக்கு ஒத்த அமைவுயர்வு உண்டோ?

ஈடி : அதிலேன் ஐயம்? அதனுல் உன்றன்
கயமை இன்னும் உயர்ந்து தோன்றுமே.

கிர : நின்னுரை முழுப்பொய்; நிதானித் துன்னுள்
என்போல் சிந்தைகொள். இறைநிலை வாய்த்தவன்
ஒருவன், அரியணை நலமெனக் கொண்டுதன்
அலைவில் வாழ்வினைத் தொலைக்க முனைவனே?
ஆளா அரசனுய் வாளா இருப்பதென்
கோளன்று; அரச வாழ்விதே போதும்.
அடக்க முடையார் மடிவரோ நசையால்;
என்முறை கேட்டு நிறைசெய நீயுளாய்;
இன்னும் உன்பதம் ஏற்றிடில், பின்மனம்
இரங்குவ பற்பல புரிதல் வேண்டும் நான்.
இரங்குவ தில்லா இறைமுறை, மனநிறைவு,
இவற்றிலும், இறைபதம் எவ்வழி என்மனம்
கவர்ந்திடும்? என்னியல்பு உவவா மிகைபுகழ்
நாடிடும் மூடன் நானலன் காண்பாய்.
யாவரும் கேளிர் யாவரு மென்னவர்;
உன்துணை தன்னுல் உவந்தவை பெறலாம்
என்பதை அறிந்தும், உன்னை நாடுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் நாடுதல் ஏதனால்? இத்தகை
வாழ்வினை விடுத்து, வேறுநான் விழைவனோ?
மோழை ஒருவனே முயல்வன் ; துரோகம்
மன்பழி; அஃதென் மனங்கொள் பூட்கையு
மன்றுகாண். என்னறி வெட்டிய வரையில்
என்றன் நண்பர் இதயப் பூட்கையு
மன்று; மற்று என்னை ஆய்வதுன் நோக்கமோ
நன்று; நேரே நண்ணுக பிதியன்
திருமனை; நான்கொணர் செய்தியில் உண்மையைத்
தெரிக; அடுத்து, வருவது உரைப்பான்
கூட்டின் குற்றம் நாட்டுக; பின்னர்
நேரே கொலைமுறை நேர்க என்மீது;
என்னுளம் உன்முறை ஏற்கும் ஒன்றாய்.
எனினும் கண்ணிலா ஐயம் தன்னால்
மறைவாய்க் குற்றம் ஏற்றலை எதிர்ப்பேன்.
நல்லோர் புகழிசை நலித்திட உண்மை
இல்லாத வசைமொழி இயம்பல் பெரும்பழி.
பொல்லா மக்களை நல்லார் என்று
கொளலும் இன்னும் குற்றம். உழவல்
அன்பனை ஒதுக்குவான் தன்னுயிர் அருநிதி
ஒதுக்குவான் அல்லனோ? காலமே உணர்ந்திடும்
உண்மையை. என்னை! உண்மை மனிதனை
உணர்தலும் காலம் ஒன்றினால் ஆகும்.
உலகும் பாவியை ஒருநாள் அறியும்.

குழு : நல்ல அறிவுரை ; நன்மதி கொண்டவர்
உள்ளம் பொருந்தி ஒழுகற்கு உவந்தது.
முன்மதி என்றும் பின்னிடர் ஈவது.

ஈடி : விரைந்தியல் சூழ்வினை விரைந்தெதிர் கொள்ளல்
புரைதீர் உபாயமாம். புரிபவன் முயல,
ஒருசெயல் இன்றி ஊமையைப் போல் நான்
வாளா இருக்கவோ?

275539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இர : வேண்டிய தென்ன ?
நாட்டி லிருந்தெனை நாதியற்று அனுப்பவோ ?

ஈடி : நாடு கடத்தல் நன்மை செய்வதாம் ;
எமன்வழி சேர்தலே ஏற்ற தண்டனை.

இர : எவ்வழி உனக்குநான் ஏதம் புரிந்துளேன்
என்பது அறிந்திடின் !

ஈடி : இன்னும்நீ விட்டிலை
பழையவுன் வாதம்.

இர : பிழைவழி செல்லுமுன்
இயல்பினை அறிந்ததால்.

ஈடி : என்செயல் செவ்விது
என்பதை அறிவன்நான்.

இர : இயலுமுன் கண்களில் ;
என்கண் ஏற்கா.

ஈடி : ஈடிலாக் கயவன்நீ !

இர : உன்மொழி பொய்த்திடின் ;

ஈடி : மன்கடன் ஆள்தலே.

இர : நெறிபிறழ் முறையை நிறுவியோ ஆள்வது ?

ஈடி : அறிக இவன்மொழி அரியஎன் நகரே !

இர : அன்பின் தீபசே ! அவள்பால் உரிமை
உனக்கே உரியதா ? எனக்குமாங் கனையளே.

குழு : போதுமே உங்களின் மோதுகை, யோகதா,
ஏதமில் எங்கள் இராணி இவண்வந்து
அணைந்தனள் ; உங்கள் பிணக்கினை நீக்கத்
துணைநன் களிப்பள். உணர்வீர் நன்கு.
(யோகதா வரல்)

யோகதா : போரியல் பண்பீர் ! பேரொலிப் பிணக்கிதன்
பொருள்தான் என்னவோ ? அடுந்துயர் ஒழியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பகை பெரிதும் ஓம்புதல் உம்நிலைக்கு
அமையுமோ? அற்ப கசப்பினைப் பெரிதாய்த்
தருக்குதல் தகுமோ? தலைவ! மனையுள்
வருக; கிரயன் விரைக உன்னகம்.

கிர: தங்காய் உன்மொழி தகாது. காரணம்
தக்கது இன்றியுன் தலைவன் ஈடிபசு,
மிகக்கொடும் தண்டனை விதித்தனன்; நாடுவிட்டு
அகலல் இறத்தல் ஆகிய இவற்றுள்
ஒன்றே தண்டனை.

ஈடி: உண்மை அம்மொழி.
என்றன் உயிரினுக் கிடையூறு ஆம்விதம்
வஞ்சகச் சூழ்ச்சி வகுத்தனன் இவன்தான்.

கிர: வன்செயல் அவ்விதம் வகுத்தனன் ஆயின்
வெஞ்சினம் கொண்டெனை விண்ணகம் வாட்டுக.

யோக: இறையருள் பற்றுடை யாயெனில் ஆணையின்
உறுதியை, ஈடிபசு, நம்புதல் நற்செயல்.
என்பொருட் டிங்குளார் பொருட்டும் நம்புக.

குழு: இணங்குக மன்ன இணங்குக;
கண்ணேக்கு மன்னர் கடனெனக்
கொண்டு, புணர உணர்குவாய்.

ஈடி: நான்மனங் கவலவோர் நியாய மில்லையே.

குழு: முன்னொரு பொழுதும் முறைசாய்ந் தறியா
அன்னவன் ஆணை அவன்கைப் பரிசை.

ஈடி: இரப்பது எதற்கென அறிவிரோ நீவிர்?

குழு: அறிவோம் ஐய.

ஈடி: அறைக நும் செய்தி.

குழு: அழியாக் கெழுமையின் ஆணை மொழிந்தனம்;
சீரிய கேள்முறை யின்றியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருயிர் நண்பனைக் கோள்மொழி
கேட்டுயிர் வீட்டுதல் நேர்மையோ ?

ஈடி : என்றன் இறப்பினை, இன்றேல் நாடு
கடத்தலை இம்மொழி சுட்டுவ தாகும்.

குழு : கீழ்மையிற் பழுத்த
சூழ்வுநம் சிந்தையிற் குடிகொளின்
வீழ்க நம்முயிர், மாள்க நம்பலம் ;
விண்ணுறை இறையருள் விழுமிய
ஒண்கதிர்ச் செல்வன் காய்க நம்மாயுள்.
ஆயின் ,
நாட்டவர் நலிந்து கேடுறும் நேரம்
அரசிறைப் பெரியோர் ஒருவரோ டொருவர்
பொருது, மன்பதைத் துன்பினைப் பெருக்கலைக்
கண்டுநெஞ்சு அயரும் ; என்னுளம் பொன்றும்.

ஈடி : எனின்அவன் செல்க. இழிமையோ டியைந்த
இறப்பு, நாடகல் வெதுதான் என்றனுக்
குறினும் உறுக ; உம்மொழி அன்றி
அவன்மொழி யன்றென் அடக்கம் கொண்டது.
அவனை என்றுமென் அகம்சினந்து ஒதுக்கும்.

கிர : வெஞ்சினக் கொடுமைபோல், வலிந்த கருணையும்
நெஞ்சிடம் கொள்ளின் நமனெனக் கொல்லுமே.

ஈடி : இவ்விடம் விட்டு நீ ஏகுக ;

கிர : ஏகுவன்.
நீதியின்றி நீ இங்கெனைக் கனன்று
வைது கடிந்தனை யாதலின் ஏகுவன்.
(போகிறான்)

குழு : அம்மையே வேண்டுக ; அரசரை வேண்டுக ;
அமைதி பேணு மாறு வேண்டுக ;
வேறிடம் செல்லு மாறு வேண்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : இடரிது எவ்வாறு எழுந்தது?

குழு : கொடிய கற்பனை பயந்தது.
ஆதர வற்ற பழிச்சொலும்
வேதனைப் புண்ணெனக் காய்ந்தது.

யோக : ஒருவரில் ஒருவர்
பழிவசை பொழிந்தனர்.

UNIVERSITY OF CEYLON
LIBRARY

குழு : அதுதான் உண்மை.

யோக : இதுஏன் நேர்ந்தது?

குழு : மீள வினவல் பாழ்வினை யாகும்.
துன்புறும் நாட்டு மனத்துயர் போதுமே.
மற்றிதை மறப்பதால் உறுமே பெருநலம்.

ஈடி : உயர்பெரும் சால்பீர்! உங்கள் இணக்கமோ
நயமிகு தகையதே.

குழு : நாமிவண் மொழிவதைக்
கேட்க, வேந்தே! பீடை பிணித்த
நாட்களில் எங்கள் நாட்டினைத் துன்பின்
மீட்ட பெருந்தகை மதிசேர் மன்னனின்
சேமப் படையைச் சினக்கும் கயமையை
நாம்மனங் கொள்வமோ?
அடுக்கும் புயலொழித் தமைதி சேர்க்கும்
திடந்தோள் வீரனைச் சினக்கும் சிறியரோ!

யோக : எனக்கும் சொல்லல் இயலாத மறைபொருள்
என்னதான் உண்டோ? என்னைய! வேண்டினேன்;
என்ன காரணம் இக்கொடும் வெஞ்சினம்
அன்னவன்பால் நீர் அகத்துக் கொண்டது?

ஈடி : எனக்குநீ நல்லோர் இவரினும் மிக்க
இனியவள்; ஆயினென்? பிழைத்தவன் கிரயனே.
எனக்கெதிர் சூழ்ந்ததும் இங்கவன் அறிவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : என்ன குற்றம்? எங்கனம் சூழ்ந்தனன்?

ஈடி : இலயசைக் கொன்றது என்செயல் என்பது
கிரயன் கூற்று.

யோக : கிரயன் தானே
அறிந்து மொழிந்ததா? பிறர்வயின் உணர்ந்ததோ?

ஈடி : அதுவே அவன்திறன்; பதர்மொழிக் குறிசொல்
ஒருவனைக் கருவியாய்க் கரந்துளான் தன்வினை.

யோக : எனின், பழி அஃதை மனங்கொளல் வேண்டாம்.
உறுவது உரைக்கும் மறைமொழித் திறமை
பெற்றவர் ஒருவரை அறிந்திலேன் இதுவரை;
என்னுரை இதனை இனிதே நிறுவுவன்.
இலயசும் நானும் ஈன்ற மகவினால்
இலயசு மரணம் எய்துவன் என்று
வீபசும் அவன்றன் பெருமைசேர் அமைச்சரும்
இயம்பினர்; நேர்ந்த தியாது. முத்தெரு
மயங்கும் தலத்தில் மறங்கூர் கள்வர்
இலயசைக் கொன்றதை உலகமே அறியும்;
குழந்தையோ மூன்றுநாள் கழியுமுன் மன்னராற்
கழற்கால் குறைத்தபின் காலன் வயப்பட
கான்மலைச் சாரலில் கைவிடப் பட்டது.
ஏனிதை அப்பலோ ஏலவே அறிந்திலன்.
மகவு தந்தையை மாய்த்ததா? தந்தையோ,
மகனால் அன்றி மற்றவர் தம்மால்
மாண்டனன்; இதுவே மறைமொழி புகல்வார்
மாண்பாம்; இன்னும் பேணவா அவருரை?
இறைவன் திருவுளம் எது? அது உவந்த
முறைமையில் நிலைவுறும்; எமக்கது திண்ணம்.

ஈடி : அன்புடையாளே! நின் மொழி கேட்டபின்
என்னகம் வேகுதே. என்றோ நடந்தவை
எண்ணஎன் உளத்திலும் ஏக்கம் புகுந்தது.
இனந்தெரி யாதவோர் இன்னலும் உதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக: என்ன நேர்ந்தது? ஏனோ இத்தனை
துணுக்கும் திகிலும்?

ஈடி: தெருக்கள் மூன்று ஒன்று
இணங்குமோர் புலத்தில் இலயசை யாரோ
கொன்றனன் என்றுநீ கூறினை அல்லவா?

யோக: அன்று கேட்ட அக்கதை தவறுது,
இன்றும் உண்மையின் இலங்குவ தறிக.

ஈடி: எங்குஎங் நாட்டில் இச்செயல் நடந்தது?

யோக: போசிசு என்ற புலத்தில், தெருகவர்
வீசி, தெல்பி தௌலியைக் கூடிடும்
இடத்தினில்.

ஈடி: என்று நடந்தது இச்செயல்?

யோக: மன்பதம் இங்குநீர் வகிக்கச் சின்னுள்
முன்னரே இந்நகர் வந்தது இம்மொழி.

ஈடி: இறைவா! எனக்குநீ இறுப்பது என்னவோ?

யோக: மன்னவா! தங்கள் இதயம் தாங்கா
இன்னல் யாதோ?

ஈடி: வினவுதல் வேண்டாம்.
இலயசின் உருவம் எவ்வாறு இருக்கும்?
இறக்கும் போதவற்கு எத்தனை அகவை?

யோக: உருவில் ஒப்பார் உங்களை; பனிபடர்
நரைமயிர்; ஓங்கிய உருவம்.

ஈடி: இறைவனே!
அறியாச் செய்கையால் சிறுமை இழைத்தனே!

யோக: மன்னவா! நடந்தது என்ன? நவில்க;
என்மனம் உம்நிலை கண்டு துணுக்குறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி: அறிவன் உண்மையை அறிதல் ஒண்ணுமோ?
இறுதியாய் நிறுவிட இன்னும் ஒருமொழி
இயம்புவாய்.

யோக: ஐய! உம் செயல்மிகு அச்சம்
பயக்குதே. அறிந்தவை யாவும் பகருவன்.

ஈடி: வேந்தொடு சென்றமெய்க் காவலர் சிலரோ?
ஏந்தல் உயர்விற்கு ஏற்ற வகையரோ?

யோக: சென்றவர் ஐவர்; தூதுமுன் சென்றது;
ஒன்றே தேர். அதில் இலயசு சென்றார்.

ஈடி: தெளிந்தேன். தெளிந்தேன். தெரித்தவர் யாரிதை?

யோக: சாவாது மீண்ட ஏவலன் ஒருவன்.

ஈடி: இன்றவன் எங்குளான்? எம்மனை உள்ளானோ?

யோக: இல்லை; திரும்பி இங்கவன் வந்ததும்,
தலைவன் கட்டிலில் தங்களைக் கண்டதும்,
நகரில் இருந்தும் மிக்க தொலைவினில்
நாட்டுப் புறத்தில் ஆடுகள் மேய்த்திட
நாட்டம் கொண்டனன், என்றெனக் கோதியே,
விடுதலை கோரி வேண்டினன்; நானும்
இணங்கினன். எளியன்! இணையிலா ஏவலன்,
உயர்ந்த ஒன்றினை நயந்து வேண்டிலன்.

ஈடி: காலம் தாழ்த்தாது அவனைக் காணுதல்
ஏலுமோ?

யோக: ஏலும். எதற்கு?

ஈடி: நங்காய்!
நெஞ்சில் எண்ணிய நினைவிறந்து மொழிந்தனன்;
அஞ்சுவன்; ஆங்கையால் அவனைக் கண்டு
கதைத்திட வேண்டுவன்.

யோக: காணலாம், கதைக்கலாம்.
இதற்கிடை, உங்கள் இதயம் வாட்டுவது
என்னவோ? பொய்யாது எனக்கு மொழிகுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி: ஆகுக. என்னுளம் நோக்கிய வாங்கு
நிகழ்வுகள் நேர்ந்திடின் நினக்கே என்கதை
பகருவன் முதன்முறை; பரிந்து கேட்பாய்.
கொரிந்து பயந்த அரசர் பொலிபசும்
தொரிசர் இனத்து மேரோபி அரசியும்
என்னரும் பெற்றோர் என்னகர் தன்னில்
பன்னரும் உயர்வு பெற்றுநான் மிளிர்கையில்,
வியத்தகு அதிசயச் செய்தியொன்று என்செவி
விழுந்தது. ஒருகால் விஞ்சிய பெருமை
அளித்தனோ அதற்குநான், அறியேன். ஒருநாள்
உடனிருந்து என்னோடு உண்டான் ஒருவன்
குடிமிகைப் போதையில் குழறியே, நான்என்
தந்தையின் மகனலன் என்று தருக்கினன்.
சிந்தை நொந்தும் சீற்றம் இன்றிநான்
புணரும் அளவினில் பொறுத்தனன். மறுநாள்
உண்மை உணர்த்து மாறென் தந்தை
தாயரை வேண்டவும், வாய்மை பொருந்தா
வசைமொழி கூறும் வலிமை ஒருவர்க்கு
இசைந்தது கண்டுஅவர் எரிந்து கனன்றனர்.
அமைந்தது என்னுளம். ஆயினும், நிலைத்தது
குமைவு. கதையோ குலவியது உலகெலாம்.
எனினும் ஒருநாள், என்னுளம் பொறுது
பைதோ தன்னைப் பரவி, உண்மை
மொழிகென வேண்டினேன். இழிமையும் கொடுமையும்
கலந்தவோர் கட்டுரை விடையாய்க் கிடைத்தது.
கலங்கிய தென்னுளம். சொல்லவும் நாவிழும்.
மன்பதை தனக்கு மாளா வசையாய்
என்றன் ஆருயிர் எந்தையைக் கொன்றென்,
அன்னையை மணந்து பல் அறம்பிழை மக்களைப்
பெறுவேன், என்ற மறுமொழி கிடைத்தது.
உரையிது கேட்டதும், உளமிக வெந்து,
கொரிந்தொடு என்விதி சரிகென, மறித்தும்
என்மனை மீளா முன்னம் தூரப்ப,
புன்கண் இதுபோல் ஒன்றும் நேராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிப்பான், நகர்விட்டு ஓடினன் கவன்று.
வழியில் உன்னிறை மடிந்த புலத்தயற்
கூடாகச் செல்லல் உற்றேன். அன்பே!
கேட்பாய் உண்மையே கிளப்பன்.
மூன்று வீதிகள் முயங்கும் புலத்திடை
நான்வர நேர்ந்ததும் நண்ணும் வழிமுன்
தூதன் முன்செலத் தொடர்ந்த மாவூர்
தேர்மிசை நீமுன் தெரித்த வண்ணம்
ஓராள் இருந்தனன்; ஒதுங்கென எனக்குக்
கூறினன் சினந்து கூட்டத் தலைவன்.
சீறினன் அவன்பெரும் சீரிய தலைவனும்.
பணியதை ஏற்றுஓர் பாங்கன் என்னை
எற்றினன்; மீதூர் செற்றம் முடுக்கவும்
தாக்கினன் அவனைநான்; தேர்மிசை சாய்ந்திதை
நோக்கிய முதுமகன், சற்றுநான் நகர்வரை
தரித்து, வலவனின் இருகூர்க் கலத்தை
எடுத்து வீசினன் என்தலைமீது.
கலமென் தலையினைக் கலக்கவும், என்றன்
வலக்கரம் உறையுமிவ் வார்கோல் மின்னியல்
விரைவினில் முடித்தது உறுவினை. முதுமகன்
வண்டியி லிருந்துமண் தலையுறச் சரிந்தனன்.
நின்றோர் யாவரும் என்கையால் இறந்தனர்.
இலயசு குருதியில் அயலவன் நாளம்
கலந்திடில் என்னிலும் கடையவன் யாருளன்?
இறையொடு உலகோர் வெறுப்பர் என்னை.
என்னையே அன்றோ அயலான் குடிமகன்
மனைகொள மாட்டான். என்னுடன் ஒருமொழி
மாறவு மாட்டான். மற்றவர்க் கென்று
சீறிநான் இட்ட சாபமும் என்னையே
சூழ்ந்தது. மன்னனை வீழ்த்திய கைகளே
மனையைப் பற்றின. என்பவ மிதுவோ?
அறவே இழிந்த தறுகணன் எனைப்போல்
எவரும் உளரோ? இந்நகர் நீக்கமும்
என்னரும் தந்தையர் பொன்னகர் நண்ணுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூளும் என்னைத் தாழ்த்திய கேடுகள்.
தந்தைநாடு தவிர்த்திடல் வேண்டும்,
இன்றேல் எந்தையைக் கொன்றென் அன்னையை
மன்றல் செய்வனும்! என்னரும் தந்தையை,
பொலிபசை, எனக்குயிர் நல்கிய கோவினைக்,
கொல்வதா? கொடியதோர் கடவுள் அன்றி,
பொல்லாப் பாழ்படு பொறுப்பினை என்மீது
ஏவுவார் யாருளர்? இறைவா! விண்ணகம்
மேவிய அரசே! வேண்டாம் எனக்கிக்
கொடுமை. இழிதகை வடுவிது பெறநான்
வாழ்வதில், மடிந்துஇம் மண்முகம் புலனற
மாய்வது மேல்.

குழு : ஐய! மொழியிவை வெய்ய.
சான்றுகள் கூறுப ஊன்றி நோக்கி
உண்மை தெளிவுற ஓர்வரை உள்ளம்
மாய்த்திட வேண்டா.

ஈடி : ஆயன் வரும்வரை,
ஆறி இருத்தலே ஏற்றவோர் வழியாம்.

யோக : ஆயனுல் ஆம்பயன் யாது விளம்புக?

ஈடி : அவன் மொழி உம்சொல் அணையின்நான் உய்ந்தனன்.

யோக : இவ்வையம் குறிப்பாய் எப்பொருள் சார்ந்தது?
யாதுநான் கூறினேன்.

ஈடி : இலயசை, கள்வரே
கொன்றனர் என்றவன் கூறினன்; ஆக
இன்னும் கள்வரே கொன்றனர் என்றவன்
நின்றிடின், நானலன் கொன்றவன்; ஒருவன்
என்பது ஒருவனே. அன்றித் தனிநடை
சென்றவன் கொலையினைச் செய்தவன் என்றவன்
செப்பிடில் நானினித் தப்புதல் அரிது;
துப்பும் தவறுது சுட்டும் என்னையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : ஆயன் இயம்பியது என்றுநான் சொல்லியது
உண்மையே. இனியவன் பிணங்கி உரையான் ;
என்னொடு இங்கர் உறையுநர் யாவரும்
அவனுரை கேட்டுளர். அன்னவன் கதையினைச்
சிறிது மாற்றினும் குறிபகர் முறையினில்
இறந்தனன் இலயசு என்றிடல் இயலாது.
என்னை ! இலயசிற்கு என்றன் குழந்தை
ஒன்றினால் மரணம் இயலுமென் றுலொட்சியசு
கூறியும் அம்மொழி கூடவே இல்லை.
தேறியது என்றன் செல்வனின் சாவே.
இறைமொழி உண்மை இருந்தவா றென்னே !
மற்றதன் பின்னர் மனங்கொளேன் இறைமொழி.

ஈடி : உன்சொல் செவ்விது எனினும் ஆயனை
இவ்விடம் பெறுவதற் கேற்றது செய்க.

யோக : தவறுது செய்வேன் தங்கள் கருத்திற்
கொவ்வா செய்திடேன். உள்ளே வருக.

குழு : மூவா நின்றருள் முதல்வன் ஆணையின்
சாவா மடியா தளரா முறையினில்
தாவி வான்வளர் தேமுறை சொற்பொருள்
மேவி வாழ்வேம் வீங்குயர் காதலில்.

செருக்கினால் செழிக்கும் வெங்கோல் ; வெளவிய
மருள்முறைக் கொள்ளையால், மலையுறை மணையின்
நின்று செருக்கும் நன்னிலை தளர்ந்து
மண்மேல் வீழ்ந்திடும். பணிக்கெனச் சமைத்த
ஊக்கினை விதிகள் தாக்கா ; இறைவனும்
ஊக்கியே அதனை ஓம்புதல் செய்வான்.

செவ்விய நேர்மை, தெய்வ அணிகலம்
ஒவ்வா என்பார்க்கு அமையுமோ செருக்கும் ?
திவ்வியம் கடிவார் எவ்வகை வெல்வார் ?
கவ்வுமண் தண்டம் தப்புமோ அவன்செருக்கு ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தினும் மறமவாவு அவனையெக் கவசம்
இறையின் பொல்லாச் செறுவினில் காக்கும்?
நெறியிகழ்ந் தநீதி ஏற்றிடின் தெய்வ
முறைமையால் மேவு மேன்மை யாது சொல்?

ஒலிம்பசு, அபயன், நிலமகள் ஆகத்
திருமனை யாவும், உரைகுறி, தம்மில்
பொழுதிது பொய்ப்பின், அழிந்திடல் நலமே.
மானுடர் உம்மொழி மதியார் இனிமேல்.

அனைத்துமாள் சூசு! வாழுதி யாயின்
இன்றே விழிக்க! பண்டை அறிவர்
மனநலம் அழிந்தனர். அப்பலோ புகழ், பெயர்
குன்றி மறைந்தன; குவலயம் எங்கணும்
மனித குலத்தின் தைவிகம் தண்டிலம்.

(அரண்மனையிலிருந்து யோகதா வருகிறாள். மாலைசூட்டியபகினை ஒன்றும் நறுமணப்புகையும் கொண்டு வருகிறாள்.)

யோக: தெய்வப் பெரியீர் செய்வ தறியேன்;
தைவிக மனைகள் சேர்ந்தென் பணிவுளம்
பரவு நொக்குடன் நறும்புகைக் கொடையும்
கரங்கொள் பலிகளும் கொண்டிவண் அணைந்தேன்.
திரிபுக் காட்சிகள் அரசரை வருத்திடும்;
பயத்தைப் பெருக்கும், ஒவ்வொரு பதத்தையும்
உளத்தில் ஏற்றவர், பழைமையால் பொழுதிதை
அளக்கும் ஆற்றலும், இழந்தனர்; இவரைத்
தேற்றும் வகையும் தேரிலேன்; என்மனை
அடுத்துறை மின்னொளிர் அப்பலோ! இறைவ!
நினக்கே என்முதல் துன்பப் பராவல்.
புன்மையின் சாபம் போக்கி எங்கட்கு
இன்னருள் புரிக; எம்பதிப் புரவலர்
துன்புறல் கண்டு சோர்ந்தனம் உள்ளம்.

(கொரிந்திலிருந்து ஒரு தூதன் வரல்)

தூதன்: அன்னியன் என்னை மன்னித் தருள்வீர்.
அரசர் ஈடிபசு அரண்மனை நாடினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வழி எனக்குச் சொல்லுதல் கூடுமோ?
இல்லை, அவருள இடமது ஆகுதல்
அறியின் எனக்குத் தெரிப்பீர், பெரியீர்!

குழு: இஃதவர் அரமனை; அவரகம் உள்ளார்,
இவரவர் மனைவி; தவப்பெரு மக்களை
அரசர்க் களித்த அரும்பெறல் அணங்கவர்.

தூதன்: அரசி வாழ்க! அமைவே சேர்க!
பெருந்தகைக் கேற்ற பெண்மகள் இவளே.
வாழ்க அவள்மனை ஊழியிற் பொலிந்து!

யோக: வாழ்க நீரைய! ஆழ்ந்தவும் வாழ்த்தினில்
மகிழ்ந்தனம்; நன்றி. மன்னரைக் காண்பது
செய்தி கூறவோ; செய்பணி யாதும்
வேண்டவோ சொல்க.

தூதன்: மாண்தகு செல்வி!
நின்பதி அவர்தம் மனையகம் மலர்க்கும்
இன்மொழிச் செய்தி.

யோக: யார்வயின் இருந்து
கொணர்ந்த செய்தி?

தூதன்: கொரிந்தில் இருந்துறும்
செய்தி கேட்டுநும் சிந்தை மகிழ்வுறும்;
ஐயமின்று; ஆயினும் நொந்துளம் நைதலும்
நேரும்; துன்புடன் நேர்மகிழ்வு மூட்டும்.

யோக: அத்துணை ஆற்றல் அமைந்தது யாதோ?

தூதன்: என்றுடு, ஈடிபசை, ஈசுமசு முழுவதும்
மன்னவர் ஆக்க முன்னம் கொண்டது.

யோக: என்ன! பொலிபசு இனியரசு அல்லரோ?

தூதன்: அன்னையே! பொலிபசு மன்னன் இறந்து
பன்னாள் கழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக: என்ன! ஈடிபசு
மன்னர் தந்தை மறைந்தது உண்மையோ?

தூதன்: வாய்மையே மொழிந்தனன் தாயே.

யோக: (பணிப்பெண்ணிற்கு)
பெண்ணே, அரசர்க்கிது சொல் விரைவில்
உரைப்பாய். (பெண் செல்லல்)
தெய்வ முன்மொழி செய்தவை யாவோ?
யார்கொலை தம்மால் நேருமென் றஞ்சி
எவர் முன் ஈடிபசு தவிர்த்தனர் இத்தனை
ஆண்டுகள், அவரே ஈடிபசு இன்றியே
மாண்டனர் இயற்கையில்.
(ஈடிபசு வரல்)

ஈடி: அன்புடை யோகதா!
மீண்டும் வெளிஎனை விளித்தது ஏனோ?

யோக: கேட்க தூதிதை; கேட்டபின் புகழ்பெறு
அறிவர் எதிருரை ஆற்றலை ஓர்க.

ஈடி: யாரிம் மனிதன்? யாதிவர் தூது?

யோக: கொரிந்தில் இருந்திவர் கொணர்ந்தனர் செய்தி.
அரசர் பொலிபசு இறந்தனர் – இறந்தனர்.

ஈடி: ஐயனே! நீரே செய்தியைக் கூறுக.

தூதன்: முதலிதை உணர்தல் விருப்பெனில் மொழிகுவன்.
மன்பதை செல்வழி மன்னனும் சென்றனன்.
என்மொழி உண்மை. நம்புக மன்னு.

ஈடி: பிணியதை முடித்ததோ? பிறர் வினை மாய்த்ததோ?

தூதன்: மூத்தகண் மூடிட மூண்ட சிறுபிணி
மாய்த்தது மன்னனை. மன்னன் பாவம்!

ஈடி: பிணியினுல் மன்னன் பொன்றினன் என்பதுன்
எண்ணமோ? கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதன் : பிணியொடு ஆண்டுகட்
பணிச்சுமைப் பாடும்.

ஈடி : பணிமொழிப் பேதாய் !
புதினம் அறிந்தனே. என்றும் அயராது,
எதிருரை ஒன்றையே என்மீது முழங்கும்
முதியரும் அறிவரும் பிதியன் தீயும்,
யாண்டு சென்றனர் ? யானென் தாதையைக்
கொன்றிட வேண்டும் என்பது எதிருரை.
என்ன நேர்ந்தது ? என்னரும் தாதை
கல்லறை போக, நான் கலமே காணுக்
கரத்தொடு இங்குளன். ஒருவழி என்னைப்
பிரிதுயர் அவருயிர் பறித்தது எனலாம்.
எனினும் தந்தையைக் கொன்றவன் நானே
ஆயினும், அறிவனின் ஆசூழ் எதிருரை,
சொன்முறை சோர்ந்தே, இன்னுயிர் நீங்கிய
பொலிபசு பொல, வலிபிழைத் தழிந்தது.

யோக : இதுவரை இவ்வாறு இயம்பினன் தேர்ந்திலே.

ஈடி : இயம்பிய துண்மையே எனினும் பயமெனைப்
பிழைக்க வைத்தது.

யோக : பழையன நினையேல்.

ஈடி : எனினும் அஞ்சுவது இன்னொன்றுளது. என்
அன்னை இன்னும்......

யோக : அச்சமா ? அதனோடு
ஆடவர் கொளத்தகு கூட்டம் என்னவோ ?
வாழ்வினில் எங்களை ஆள்வது தற்செயல்.
உறுவது யாதும் அறிந்திலம் முன்னர்.
நாள்தொறும் இயல்வரை நலம்பெற வாழ்குவம்.
தாய்மணச் சிந்தையின் நோய்ப்பயம் கொளற்க.
எத்தனை மைந்தர் இத்தகை கனப்பணி
கொண்டுளம் நொந்தனர் ? மண்ணிதில் வாழ்க்கை
சிறக்க வேண்டினன். மறக்கவிக் கனவினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி : அன்னை இறந்தனள் என்னின் நியாயமே
உன்மொழி ; அன்னவள் இன்னும் வாழ்கிருள்.
என்ன வார்த்தைநீ இயம்பினும் அச்ச
மின்றி என்மனம் நின்மொழி ஏற்குமோ ?

யோக : எனினும் தந்தை இறந்ததோர் தேறுதல்
அன்ருே.

ஈடி : உண்மை. எனினும், அன்னவன்
இன்னுயிர் உளவரை என்நிலை பாழே.

தூதன் : மன்னவ, பொறுத்தருள். இன்றுநீர் அஞ்சும்
பெண்மகள் யாரோ ?

ஈடி : பொலிபசின் மனையாள்,
மெரோபி அரசி.

தூதன் : அரசவள் வாழ்வு
தங்க ளுயிரைத் தாக்குவ தெங்ஙனம் ?

ஈடி : மரணம் பொழியும் அறிவன் உரையொன்று
எம்தலைமீது வந்துள தைய.

தூதன் : முறையில் பிறர்க்கும் மொழியுந் தகையதோ ?

ஈடி : தகையதே. என்கையால் தந்தையின் குருதியை
உகுத்தவர் இன்னுயிர் ஒழித்தென் அன்னையை
மனையெனக் கொள்ளும் மாள்வெனக் கெய்தும்
என்றனன் உலொட்சியசு. இதனுல் அன்ருே
பன்னெடுங் காலம் என்னருங் கொரிந்தினைப்
பிரிந்து வாழ்ந்தனன் ; ஒருங்கு வாழாக்
குரவர்க் கீடு கூறுதல் அரிதே
எனினும் இயல்வரை நன்றே வாழ்ந்துளேன்.

தூதன் : நாடு துறந்து நலிந்த காரணம்
கேடுறும் எதிருரை கெட்ட தனுலோ ?

ஈடி : எவ்வகை யானும் எந்தை ஆருயிர்
வவ்வுதல் தவிர்க்கும் விரதம் பூண்டனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதன் : எனின்உம் மற்றை ஏக்கம் போக்குவன்.
நன்மை செயவே நானிங்கு அணைந்தனன்.

ஈடி : நன்றியை நானேர் நாளும் மறவேன்.

தூதன் : உண்மை சொல்லின், உம்மகம் மீண்டதும்
வேண்டும் நன்மை விரும்பிச் செய்விரோ?

ஈடி : என்னகம் செல்லவா? என்றுமென் பெற்றோர்
தம்மகம் அணையேன் நம்புக. சத்தியம்.

தூதன் : என்னரும் இளவல்! என்ன ஏமாற்று!

ஈடி : எவ்வயின் ஐய! அவன்மீ தாணை!
வியம்புக உண்மை.

தூதன் : இல்லம் சேர்க;
மயங்க வைத்திடும் பயமிது.........

ஈடி : ஆமதற்கு என்ன? பீபசு சொன்மொழி பொருந்துதல்
என்வயின் கூடுமே.

தூதன் : உம்மிரு குரவர்
தம்வழி பாபம் சார்வது பொய்க்கதை.

ஈடி : ஆமாம் என்றுமென் ஆகம் துளைத்திடும்
சோகம் அஃதே.

தூதன் : யாவும் பொய்யே;
அய்யனே உங்கள் பயங்களும் வீணே.
நியாயமும் அற்றவை.

ஈடி : நேர்மையில் அவர்கள்
மைந்தன்நான், எவ்வாறு பொய்யாம் என்பயம்?

தூதன் : அரசர் பொலிபசு, உறவினர் அல்லர்.

ஈடி : என்ன பொலிபசு! என்றன் தந்தை
அல்லர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதன் : என்னைப் போலவே ; அல்லர்.

ஈடி : உம்மைப் போலவா ; என்ன இதன்பொருள் ?
தேரிலேன் ஐயனே நேரிதில் விளக்குக.

தூதன் : எவ்வயின் யானும் தாதை அல்லனே,
அவ்வயின் அவரும் தாதை அல்லர்.

ஈடி : ஆயின்நான் தனயன் ஆயது எங்ஙனம் ?

தூதன் : மொழிகுவன் அரசே. மகனாய் அவர்க்குமை
அளித்தவன் நானே.

ஈடி : அளித்ததா ! இருந்தும்
பெற்ற மகனெனப் போற்றினர் என்னை.

தூதன் : பிறமகார் அவர்க்கிலை.

ஈடி : என்னை எங்கோ
கண்டனர். இல்லை கொண்டனர்.

தூதன் : கண்டேன்,
மரஞ்செறி சித்திரன் மறைவினில் ஒருநாள்.

ஈடி : அங்குனைச் செலுத்திய அலுவல் யாதோ ?

தூதன் : மலைமிசை ஆடுகள் மேய்த்தல் என்தொழில்.

ஈடி : ஆயின் நீ கூலி கொள் ஆயனோ கூறுக.

தூதன் : ஆயவன் ; அவ்வாறாய நற்பேறு
ஒன்றினால் உம்முயிர் ஓம்பிய வாய்ப்பினன்.

ஈடி : என்னைநீ கண்ணுறும் அமையும் தீங்கோ
துன்பமோ யாதெனைச் சூழ்ந்தது விளம்புக.

தூதன் : கணைக்கால் நொய்ம்மையே சரிதையைக் கூறும்.

ஈடி : பண்டைப் பிணியது மீண்டும் கதைக்கவோ ?

தூதன் : கணைக்கால் பிணைத்த கான்முளைக் கட்டினை
வெட்டியோன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி: வாய்மையே மொழிந்தனை.
தொட்டிலில் தொடங்கிய வடுவதை என்றும்
அணியுமே என்னுடல்.

தூதன்: பிணிப்பதால் அன்றே
ஆயது இன்றும் இயலும் நாமமும்.

ஈடி: இறைவா! இதனை இயற்றியோர் யாவர்?
அன்னையோ ஐயனோ!

தூதன்: அறிகிலேன் ஐயனே!
என்னிடம் உம்மை ஈந்தவன் அவனை
வினவுக.

ஈடி: வினவவா? என்ன! நீயே
என்னைக் கண்டிலை என்பதுன் கருத்தோ?

தூதன்: அன்றோர் ஆயன் என்னிடம் உங்களை
அடைக்கலம் அளித்தனன்.

ஈடி: அன்னவன் யார்? அவன்
பெயர்யாது? கூறல் இயலுமோ?

தூதன்: இலயசின்
பேர்களில் ஒருவன் அவனென அறிவேன்.

ஈடி: என்ன இலயசா? எங்கள் பண்டை
மன்னன் அல்லனோ?

தூதன்: மன்னன் இலயசே.

ஈடி: அன்னவன் உயிரொடு இன்னும் உளனோ?
அவனைக் காணுதல் இயலுமோ?

தூதன்: இயலும்; உங்கள் அவையோர் அவனை அறிவரே.

ஈடி: ஆன்ற, பெரியீர் தூதன் உரைத்த குறிகள்
பொருந்திய இடையனைத் தெரிந்தவர் யாரும்
உளீரோ? நகரிலோ வெளியிலோ அவனை
யாரும் கண்டிரோ? அறிந்திடின் உரைக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையிதின் ஆழம் அறிதற் கிதுவே
இயைந்தநல் அமையம்.

குழு: ஏலவே நீங்கள்
அறிய நாடிய நாடவன் அவனுய்
இருத்தலும், கூடும்; எனவே எங்கள்
அரசியே இதனை அறுதியாய்க் கூறும்
தகைமை உடையார்.

ஈடி: தகைமைசேர் மாதே!
இவ்விடம் அழைக்கநாம் அவாவிய மனிதனை
அறிவாய்; தூதன் கருதும் மனிதன்
அவனோ?

யோக: *(பீதியால் வெளுத்து)*
அதனால் ஆவது யாதோ?
தூதன் யாரைச் சொல்லினன்? இன்றதால்
பேதம் ஒன்றிலை. தூதன் ஓதிய
யாவும் மறக்க. ஆவது ஒன்றிலை.

ஈடி: பேதாய் பயனில பேசேல். என்றன்
பிறப்பின் மறைவினை அறிவரை, உளவிதை
ஆதியோ டந்தம் ஆய்தல் வேண்டினேன்.

யோக: வேண்டாம், ஈசன் ஆணை! வாழ்வது
வேண்டில் விடுகவிவ் வேட்டை. துன்பினில்
அடியேன் உழன்றது அமையும்.

ஈடி: அன்பே!
விடுவாய் நடுக்கம். வீண்பயம் ஏனோ?
மும்மையும் தொடர்ந்து முறைமுறை அடிமையாய்
வாழ்ந்தேன் எனினும் தாழ்விலை உனக்கே!

யோக: ஆயினும் தவிர்கவுன் ஆய்வினை. பரிவொடு
வேண்டினன், விடுகவிவ் வேட்டையை.

ஈடி: யோகதா!
வாய்மையை அறியாது ஓய்ந்திட மாட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : என்வழி செவ்விது நன்மையை எண்ணியே
கட்டுரை கூறினேன். காப்பதும் கடனே.

ஈடி : நன்மை என்றெரு நச்சர வென்றுமே
நின்று நமனென நலித்தது போதுமே.

யோக : பாழே உவக்கும் ஏழை மனிதனே!
உண்மை அறிய உயிரொடு வாழுவோ!

ஈடி : யாரே ஆயினும் இடையனைக் கொணர்வீர்.
காரிகை இவள்தன் சீரிய பிறப்பில்
பெருமகிழ் வெய்துக; வருவது வருக.

யோக : பாழும் பழியும் ஆள்க உம் விதியை!
இதுவே என் இறுதி வார்த்தை.
ஒருசொல் இனிநான் உரைப்பதற் கில்லை.
(போகிறுள்)

குழு : எதிருறும் துன்பினை எண்ணியே அரசி
கதிஇலை கலங்கிக் கடிது மறைந்தனள்.
வெளிச்சொல மறுக்கும் மொழியிதில் யாதோ
பழிபடர் கொடுமை வெளிப்படல் கூடும்.

ஈடி : எத்துணைக் கயமை, எத்துணைக் கீழ்மை!
அத்தனை பாழும் அம்பலம் ஆகுக.
என்றன் பிறப்போ டொன்றிய மறைவினை
மன்று படுத்தல் என்கடன் ஆகும்.
பெண்ணின் பெருமையில் எண்ணம் நிலைத்த
பெண்ணிவள், என்றன் பிறப்பின் இழிமையில்
புண்படும் மனத்தினள்; நன்மையை நல்கிடும்
தண்ணளி வண்மையின் தனயன்நான், நாண
அணைவது ஒன்றிலை; வண்மையே என்னரும்
அன்னையாம்; பெரும்பொழு தென்னுநற் செவ்வியர்
என்னுடன் பிறந்த கன்னியர்; அவர் தம்
பருவச் சுழலொடு உறழுமென் உயர்வும்,
வீழ்வும்; வாழ்விது வாய்த்தபின் வேற்றவன்
ஆக விழையுமோ என்னகம்; பிறப்பின்
ஆதி அறிந்தே ஆறிடும் என்னுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : முன்னுணர் மதியெனைப் பிழையா
தென்னின், நாளை எழுமதி
எம்பதி பிறப்பின் மறையினை
அம்பல மாக்கிடும்; சிதரன்
நாமமெம் சிந்து நிறைந்திடும்.
எம்பதி தந்தைதாய் செவிலியாய்
அமைந்தவன் புகழ்மிக ஓங்குக;
வீபசின் இசைவிதற் காகுக.
மலைகுலாம் பண்ணின் காதல்
வலைப்படு, வனவர மகளின்
மதலையோ, இன்றேல் உலொட்சியசு
புதல்வனோ, உயர்பசும் வெளிஉலாம்
ஒளியிறை முளையோ, சிலீன்பதி
களிசுதன் இவனோ? எலிகனில்
அரமகள் அளிக்கத் தயோனிசு
கரங்கள் ஏற்ற திவனையோ?

ஈடி : பெரியீர்! தொல்லையில் வருபவன் எங்கள்
ஆயனோ? முன்னர் அவனைநான் அறிந்திலேன்
ஆயினும், அவனே. அவனும் கொரிந்தியன்
நேயனும் ஒத்த ஆயுளர்; அவனை
அழைத்திவண் வருபவர் அரண்மனை அலுவலர்.
அஃதவன் அலனேல், அவனைமுன் அறிவீர்
உரைப்பீர் உண்மை.

குழு : வருபவன் அவனே.
அவனைநான் அறிவேன் இலயசின் ஆயன்.
அவனவர் சேவையில் அமைந்தவர் எவரையும்
அனையநற் பண்பினன். அதிலோர் ஐயமின்று.

(முதிய ஆயன் ஒருவன் பணியாள்களுடன் வருகிறான்.)

ஈடி : கொரிந்தியன் தூத! உரைக்க முதற்சான்று.
உன்னுரைப் பொருளிற் குரியவன் இவனோ?

தூத : அன்னவன் இவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி : ஆயநல் மகனே!
எனைப்பார். என்றன் வினுவிற் கேற்றநன்
மொழிதரல் உன்கடன். முந்திநீ இலயசின்
தொழும்பனுய் ஒழுகியது உண்டோ?

ஆய : உண்டு ஐய;
அவண்பிறந்து வளர்ந்தவன்; வணிகப் பொருளலன்.

ஈடி : எவ்வகை முயற்சியில் ஈடுபட் டுழைத்தனை?

ஆய : ஆயுளிற் பெரும்பால் ஆயனுய் வாழ்ந்தனன்.

ஈடி : நாடெதில் நின்வினை ஆற்றினை; கூறுக.

ஆய : சிதரனே, அயலோ, சிந்தையில் இல்லை.

ஈடி : முன்னிம் மனிதனைக் கண்டது உண்டோ?

ஆய : இவர் யார்? எங்கு நான் இவனைக் கண்டேன்!

ஈடி : நன்கு பார். இம்முகம் தன்னை நீ கண்டிலை!

ஆய : நினைவிலை. கண்டனன் என்று நான் கூறிடேன்.

தூத : எனக்கதில் வியப்பிலை; நினைவு கூர்ந்திட
ஒன்று சொல்குவன். பண்டு சிதரனில்
அவனிரு மந்தையும் நானொரு மந்தையும்
கொண்டநல் அயலுறை ஆயராய், அமைந்தனம்.
வேனில் தொடங்கி வீழிலை வரைக்கும்,
மூன்று பருவம், ஆண்டுநாம் உறைந்தனம்.
வீழ்மழை காணில் நான் மீளுவன் கொரிந்து,
நண்பனே இலயசின் பண்ணை நண்ணுவன்.
இவ்வழி நடந்தது என்பதென் நினைவு.

ஆய : செவ்விதில் கூறினை; சேண்மையில் நடந்தது.

தூத : நல்லது. பண்டு நீ ஓராண் மகவினை
நல்கினன் மகவென வளர்க்க நவின்றது
நினைவினில் உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய : (பயத்துடன்)
உன்கருத்தொன்றும்
உணர்ந்திலேன். என்ன உரைத்திடில் உவக்கும்
உனக்கு?

தூத : நண்ப, உன்றன் ஆண்மகச்
சேயிதோ உள்ளனன்!

ஆய : பேயன் போல்வீண்
பதர்மொழி பகரேல், காக்கநின் நாவினை.

ஈடி : முதியோய் தவிர்க்க மீதுரை, உன்னிலும்
நேர்மை குன்றுச் சீரியன் போலிவன்
தோன்று கின்றனன்.

ஆய : மேன்மை சேர் தலைவ!
தங்களை வருத்திய தெங்ஙன் ஐய?

ஈடி : சேயினைப் பற்றிய கேள்வியைக் கேட்டுமோர்
வாய்மொழி கூறிலை.

ஆய : வாய்மை ஓராது
பற்பல கூறினன்; சொற்பொருள் தேரான்.

ஈடி : உரைக்க உளங்கொண்டு உண்மை. தவறில்
வருத்தி அதனைத் தெரித்திடச் செய்குவம்.

ஆய : உடல்மிக நலிந்த படுகிழம் என்றனைத்
திருவருள் எண்ணி வருத்துதல் வேண்டாம்.

ஈடி : கரந்தனைப் பற்றி இறுகப் பிணிப்பீர்.

ஆய : என்ன இதன்பொருள் ஐய! இன்னும்
என்ன அறிவதும் நோக்கம். கூறுக!

ஈடி : அன்னவன் கூறிடும் மகவினை அன்றவற்கு
அளித்தது நீயோ? மொழிக உண்மை.

ஆய : அன்னவன் யானே. அன்றே நமனெனைக்
கொன்றிலன் என்பதென் பெருந்துயர் பெரியோய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி: இன்றது நேர்ந்திடும். உண்மை உரைக்க மறுத்திடின்.

ஆய: உரைப்பதும் இறப்பினை ஒக்குமே.

ஈடி: இன்னும் ஏய்ப்பதுன் எண்ணமோ?

ஆய: ஏலவே
அவ்வாறு அளித்தனன் என்றுநான் கூறினன்.

ஈடி: யாருடை மகவது? உனதா, பிறரதா?

ஆய: என்மக வன்று; பிறரகம் பயந்தது.

ஈடி: யாரகம்? யார் மகன்?

ஆய: ஐயனே! தேவர்
ஆணை, இனியிதனை வினவுதல் வேண்டா.

ஈடி: வீண்மொழி விடுக. விடை உடன் தருக.
இனிநான் ஏதும் இயம்பில் தவறுதுன்
இன்னுயிர் மாய்ந்திடும்.

ஆய: இலயசு மனைசேர்
மகவது.

ஈடி: அடிமையா? அன்றேல் அன்னவர்
பெற்றதா?

ஆய: இதற்கோர் மறுமொழி வேண்டுமோ?

ஈடி: கூறல்உன் கடன்; செவி ஏற்ப தென்பணி.

ஆய: அன்னார் மகவென அன்றுளார் கூறினர்;
உங்கள் அரசியும் உண்மை தெரிந்தவர்.

ஈடி: அவளா மகவினை அளித்தவள்?

ஆய: அவரே.

ஈடி: காரணம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய : அழித்தலே.

ஈடி : என்ன! தான் பெற்ற மகவையா?

ஆய : ஆமைய.
கேடுசூழ் கட்டுரை வாட்டுமென் றஞ்சி.

ஈடி : என்ன கட்டுரை?

ஆய : தனயன் தாதையைக்
கொல்லுவன் என்பது.

ஈடி : நல்லது. என்ன
சிந்தையில் சேர்த்தனை குழந்தையை இவனிடம்?

ஆய : கொல்லு மெண்ணமென் சிந்தையில் ஊன்றிட
இல்லை ஐயனே. தன்னகம் தனூர்
எடுத்துச் செல்வன் என்று நினைத்தனன்.
எடுத்துச் சென்றவன், இன்னுயிர் காத்தனன்.
நிகழ்விது ஆயிற்று. நீங்களே அன்னவர்.
ஆயின் பாழ்த்து மாய்ந்ததும் வாழ்வு.

ஈடி : தெய்வமே யாவும் தெளிந்தன; தெரிந்தன.
ஒளிவினி வேண்டாம்; பேரொளிப் பிழம்பே!
பேர்த்துனைக் காணுப் பேறெனக் கருள்க.
பிறப்பினில் பாவியேன்; மணப்பினில் பாவியேன்.
சிந்திய குருதியில் செப்பரும் பாவியேன்.

(ஆயனும் தூதனும் செல்லல்)

குழு : மாய்புகழ் மாந்தர் மரபெலாம் ஆவதென்?
மாயையில் மடிந்து மயக்கினில் முடியாத்
தூய்நலம் துய்த்த மானுடன் உண்டோ?
மாய்புகழ்ப் பெற்றியோர் மகிழ்பெறுர் என்பதற்கு
ஆயநற் காரணம் காட்டுமிவ் ஈடிபசு.

மிகவுயர் உறுதியில் பகைச்சிறை அறுத்து
தகுபரிசு அனைத்தையும் தகைத்தவர் யாரே?
கீழ்பதப் பேயினை ஆழ்கடல் அமிழ்த்தியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழ்தடுத் தாண்டவெம் பேரரண், புகழிறை,
வாழ்த்துமே தீபசு அவன்பதம் வீழ்டு.

இதயம் மாய்த்திடும் இன்னல் இதனினும்
உண்டோ ?
பதியிழந்து கணத்தினில் பாழ்நிலை புக்கவர்
யாண்டுளர் ?
பீடுளாய் ஈடிபசு !
தந்தையின் தனயன் ஒருதோள் துயில்கையில்
சிந்திய கான்முளை சீறி யிராதோ ?
காலம், எல்லாம் கருதா வேளை
கண்டது ;
மன்றல் பகடியை, மண - மகன் நிலையினை,
உணர்ந்தது.
இதுவுன் காஞ்சி.
இலயசு மகனுனைக் கண்டதே பெரும்பழி !
நேற்றென் பேரொளி ; இன்றோ மீளாப்
பாழிருள்.

(அரண்மனையிலிருந்து பணியாள் வரல்)

பணியாள் : நன்னகர்த் தீபசின் நவையறு பெருமகார் !
என்றும் எங்கோன் குலவழிக் கயராக்
கேண்மையும் நன்மையும் பூண்டீர் ! இங்குநீர்
காண்பவை கேட்பவை கொண்டுளம் கதறுவீர்.
இசுதர் நீர்நிலை பசிசின் நீர்நிலை
முழுவதும் முயலினும் மனையக மறுவினைக்
கழுவுதல் கூடுமோ ? கடிதில் உலகம்
தெரிந்திடும் சூழ்வினை ; விருப்புடன் வேட்ட
குரூரக் கொடுவினை ; கரியவை, இவைதமைக்
கழுவுதல் இயலுமோ ? கூறுவீர்.

குழு : இதுவரை இறந்தவை, இதுவரை கண்டவை,
எத்துணை எண்ணி ஏங்கி அழுதனம் ;
இனிஉம் கதைதான் என்செயும் எமக்கு ?

பணி : சுருங்கச் சொல்லின் இராணி இறந்தனள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : இராணி எவ்வழி இறந்தனள்? பாவம்!

பணி : தன்கையால் இறந்தனள். தனியிழி செயலிதைக்
கண்ணுறு மக்கள் உணரார் கொடுந்துயர்
இன்ன தென்பதை. எனினும், எண்கணுறல்
கண்டதை, நினைவு கொண்டு அவள் இறுதியில்
சிந்தை தவித்து நொந்ததை மொழிகுவன்.
உணர்ச்சியில் தவித்தவள் உடன்மனை சென்றதைக்
கண்டீர். ஆங்கவள் கூந்தலை விரல்களால்
பற்றிய வாறு தன் மன்றல் படுக்கை
உற்றனள்; பின்னர் அறையின் கதவினைத்
திறந்து அவள் திடீரெனப் பின்என்றோ மடிந்த
இலயசை நினைந்தும், தொலைநாள் அவற்குத்
தானீன் றளித்த கான்முளை, தன்னை,
தாதையைக் கொன்ற தனயனை, எம்மகன்
தனக்கு, தாய்பிற சேய்களைப் பொல்லா
நலந்தேய் கரவின் பலனெனப் பயந்தனள்,
அன்னவன் தன்னை நினைந்தும், கதறினள்.
பின்னர் இருமுறை தனக்குத் தந்தையும்
தனயனும் கணவராய் அணைந்ததும், மகற்கு
மகவு பெற்றதும், அகங்கொண் டழுதனள்.
அவ்வரை அறிவோம். அவள்முடி வுற்றவாறு
அறியோம். அவள்விதி அறியுமுன் அரசனே
பீறிடும் துயர்க்குரல் பெருக்கிய வாறவண்
நுழைந்தனன். அவனையே நோக்கினர் யாவரும்.
சுழன்றவன் உழன்றவன் "வாள்,வாள்" எனவவன்
எம்மிடை அரற்றினன். "அம்மனை எங்கே?
அவளென் மனையலள். நான்விதை பட்டதும்
நான்தினை யறுத்ததும் ஆன புலமவள்,"
என்று நம் அரசன் கனன்றவாறு அரற்றித்
திரிகையில், நாமவள் இருப்பிடம் காட்டாது
ஒளித்தன மாக, ஒரு பேய் அவற்கு
வழித்துணை ஆயது; தலைவன் ஒருவனின்
விளிக்குரற் கியைய ஒழுகுவான் போல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளங்கிழித் தெழுகுரல் எழுப்பி விசையொடு
மூடிய கதவினை மோதிப் பொருந்திய
பூட்டினை உடைத்தறை புகுந்தனன் மன்னவன்.
ஆங்குநாம் கண்ணியை, ஆடுமோர் ஊசலை,
தூங்குமோர் பெண்ணினைக் கண்டனம்; அவனும்
கண்டனன். கண்டவன் உருக்கும் குரலொடு
பிணிப்பினை அவிழ்த்து, மண்மிசை அரசியை
வளர்த்தினன்; வளர்த்தி அன்னவள் ஆடையைக்
கொளுவிய பொன்னிழை ஊசியைப் பறித்து
கைத்தொலை விசையொடு தன்கணுள் குத்தினன்.
எத்தகைக் கண்கள்! இனியவன் பழியினை,
புன்செயல் இழிவினை, புலங்கொளாக் கண்கள்;
என்றுமே நோக்க ஏற்பிலாத் தகையவை
இனிக்கொளாக் கண்கள். எண்ணம் இன்றியே
எதிர்பார்த் தவன்மிக இருந்தவர் தம்மேல்
பதிந்திடாக் கண்கள்; பாயிருள் அன்றிப்
புறம்இனிப் பொருந்திடாக் கண்கள்; ...என்றவன்
பற்பல அரற்றியே பன்முறை கண்களுள்
விழிநீர் குருதியில் அளைந்து தாடையின்
இழிவரை குற்றினன். இழிந்தவை துளியல;
சேப்புச் சோணையின் சிந்துகான் யாறெனப்
பாவுபேர் அருவியாய்ப் பாய்ந்தன அவைதாம்.
மனைவி கணவன் மறச்செயல் அன்றோ
வினைமூண் டவர்தமை வருத்தியது; ஒத்துப்
பண்டவர் ஈட்டிய பார்புகழ் பெருமை,
பண்புடன் பெற்றது; இன்று பெயருள
தீமைகள், கேடு தேய்வு சாக்காடு
ஏமாற்று அல்லல் என்பவை யாவும்
அவர்களைச் சூழ்ந்துள.

குழு: அரசர் இன்னுமே
அவதியில் உளரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி : ஆமாம் ; அரசர்
கதவினைத் திறவெனக் கூறினர் ; திறந்து
தந்தையைக் கொன்ற தனயனைத், தாயை ...
பொல்லா அச்சொலைச் சொல்லக் கூடுமோ ?
தீபசுப் பெருநகர் காண்க விடுகெனக்
கூவினர். தன்னா கொட்டிய சாபம்
தன்மனை தீண்டாது தவிர்க்க நாட்டினை
மன்னன் துறப்பினும் துறப்பன் ; எனினும்
துன்புறும் அன்னவற் குறுநல் வழித்துணை
ஒன்றுமே இல்லை. இனிஇதை அறிவீர் ;
கதவுகள் திறப்பதைக் காண்க ; அங்குநம்
இதயம் தீய்ந்திட எழுமோர் துன்பக்
காட்சியைக் காண்பீர். வெறுப்புமே காணிடில்
கரைந்து நீருகும் காட்சி.

(ஈடிபசு குருடனாக வரல்)

குழு : என்றும்நான் எதிருருப்
பொறுக்கரும் கொடுமை ;
புன்மைதோய் மாற்றம் ;
பொல்லா அழிநிலை ;
புலம்பொருத் துன்பம் ;
என்னபாழ் ஊழோ,
மின்னெனச் சாடி
உமைமண் படுத்தது.
துன்புறும் தலையே,
கண்கொள ஆற்றேன்.
கண்ணிணை பொத்துவன்.
என்னகர் விழைவது
கண்டுளம் தரியேன் ;
செவிகொள் அவாவை
சிந்தையில் அஞ்சுவன்.

ஈடி : தாங்கரும் துன்பமே,
யாங்குளன் நான்தான் ?
வளியினில் மிதக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியென் குரலோ?
எத்தகை விதியோ
எய்திய தெனக்கு!

குழு: செவிகொள இயலாச்
செவ்வியும், கண்கொள
முடியாக் கொடுமையும்,
படிந்தது அவ்விதி.

ஈடி: விடியலோ இல்லாக்
கொடிய விலக்கரும்
இரவே!
வளியுமே அகற்றரும்
பழிப்பரு முகிலே!
மீள்மீள் என்னகம்
கீண்டிடும் நோவே!
ஊனிலும் என்னுயிர்
ஆழ்கினை வதனிலும்
ஊன்றிய துன்பே!

குழு: உண்மை. உண்மை ஊனிலும் உளத்திலும்
எனவிரு தரத்திலும் நோல்தரும் இங்நோ!

ஈடி: என்னரு குள்ளவர் என்றும் பிறழா
என்னரும் நண்பரோ?
கண்ணிலி எனக்குத் துணைவழி உம்கையே.
இன்னுமென் அருகினில் உளிரோ?
என்செவி வீழ்குரல் உமதே ஆயினும்
கண்டிலன் உம்முகம்.

குழு: இதுசெயல் புரிய எவ்விதம் துணிந்தீர்?
எத்தகைக் கொடுமையோ இவ்வழி உய்த்தது?

ஈடி: அப்பலோ நண்பரீர்! ஆமாம் அப்பலோ!
இப்படு துயரென் இதயம் திணித்தனன்;
இஃதவன் செயலன்று என்செயல் காண்க;
எல்லாம் புன்கணே ஆயவென் கண்களால்
நல்லது யாதும் ஆகுமோ நவில்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : இவ்வுரை மறுத்தல் இயலா தெமக்கு.

ஈடி : யான்கண் டுவக்க யாணர் எங்குளது?
கண்செவி மகிழ்ந்திடக் கவினெங் குளது?
நாடிதை விட்டு நெடுந்தொலை போக
உறுதுணை செய்வீர். ஊழ்த்தனன் பாவி;
தேவரும் வெறுத்த பாவியர்ப் பாவிநான்.

குழு : இருநோ உற்றீர்; உயிரிலும் ஊனிலும்
உற்ற முரணிதை அறியா வாழ்க்கை
இயைந்திடின் எத்துணை நன்மையாம்!

ஈடி : என்காற் பணியறுத் தெனக்குயிர் அளித்த
நன்னன்! அவன்தலை நாசமாய்ப் போக!
இறப்பிற் கவ்வுயிர் ஈன மாற்றும்.
எனக்கும் என்னவர் எவர்க்கும் இறப்பு ஓர்
நன்மையாய் அமைந்திடும்; நாசமும் இலையாம்.

குழு : நாமும் அதனையே நச்சி யிருப்போம்.

ஈடி : தந்தையைக் கொன்றேன், இறையிலி, முடிவில்
ஈனத் துதித்தோன், தம்பியர் தனயர்
ஈன்ற தாய்ப்பதி, ஈடிபசு என்றிவ்
வுலகம் உரையா இழிவசை ஒன்றிலை.

குழு : எனினும் இச்செயல் ஏற்புடைத் தன்று.
குருடாய் வாழ்வதில் மரணம் மேலாம்.

ஈடி : இதனினும் உவந்தது இயலு மென்பதை
இதயநான் கொள்ளேன்; இதைவிடப் பிறவழி
எனக்குப் புகலேல்; இடுகாட் டப்பால்
புன்கண் ஒளியுடன் எவ்வயின் எந்தையை
நோக்குவன்? இறப்புமே ஈடுசெய் முடியாப்
போக்கரும் பாபமென் அன்னைக் கிழைத்தபின்
நோக்கும் வேண்டுமோ? ஈன்ற வாற்றினை
எண்ணிலென் மக்களைக் கண்கொள ஏங்குமோ
என்நெஞ்சு? அழகிவை எதிர்கொளக் கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமோ? தீபசின் மேலோன் துயர்நிறை
ஆண்மகன் கண்கொளல் ஆகா எனநான்
கடிந்த இந்நகர்க் கோபுரம், திருத்தகு
படிவம், இவைதமைப் பார்க்கக் கண்களோ?
கறையினைத் தீங்கினை, கடவுளர் கெடுகென
அறைந்த இலயசின் சுதனைக் களைகென
மக்களைப் பணித்தபின், மறுவது இழைத்தோன்
இக்கீழ் மகனென ஏற்றபின், மக்கள்
நோக்கினை எதிரவோர் நோக்கும் வேண்டுமோ?
கேள்செவி ஒழிப்பன், கேடதற் கிழைக்கச்
சூழ்வழி யுண்டெனின்; பாழினில் இவ்வுடல்
வீழ்த்தும் வரைநான் வாளே இருந்திடேன்.
துன்பம் நண்ணிடாத் தொல்லையில் உள்ளம்
ஒன்றி யிருப்பது உண்மையில் இன்பமே.
சிதரன் அன்ஞய்! இதற்கோ என்னைநீ
பேணி வளர்த்தனை? பிறந்த வாற்றினை
நாணம் இன்றிநான் நவில வைப்பதில்
மடிய விட்டிடல் மகிழ்ச்சி யளித்திடும்.
குடிநகர் கொரிந்தே! கோதிலாப் பொலிபசே!
தாயக மாய தாரகச் செல்வமே!
அளிசெய்து வளர்த்தவும் இளமகன் சிந்தையில்
பழியொடு பாவம் பிணைந்த தீக்கறைத்
திறம்நீர் அறிவிரோ? சேயவன் தூய்மையில்
மறமும் கொடுமையும் மண்டி மடிந்தது
அறிவிரோ? காட்டின் அகல்வினில் முத்தெரு
முத்தும் மோனச் சதுக்கினில், மறுவில்
எந்தை குருதியை, எனது குருதியை,
சிந்தை யின்றியே சிந்தி இறைத்தனன்.
அன்று நடந்தவை யார் நினைவு கூருவர்?
என்ன எண்ணிநான் அன்று தீபசை
நண்ணினேன்? முறைதவிர் புணர்வோன்! தோன்றிய
வழிக்கண் ஊன்றிய பழியோன்! தந்தை
மகன், உடன் பிறந்தோன்! பிறழ்முறை மன்றலில்
மனைவி, அன்னை, மணமகள் என்பார்
மூவரை ஒன்று மயக்கிய காதகன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்குல இழிவெலாம் புணர்ந்துரு வாயவோர்
புன்மையில் படிந்தவன்! புகல்தகாச் செயலவை.
மொழிதகாப் பாழவை; முழுமுதல் ஆணை,
ஒழிப்பீர் என்னை; ஒளிப்பீர் என்னை;
ஆழ்கடல் அமிழ்த்தி ஆவி போக்குவீர்;
இவ்விடம் விட்டெனை எடுத்துச் செல்வீர்;
கருணை காட்டுவீர்; கரமிதைப் பிடிப்பீர்.
பரிந்தெனை வேறிடம் போக்குவீர். செயலிதற்
கிரங்கேல் செய்பழிப் பயனெனக் குரியதே.

குழு: கிரயன் வருவது அறிக. நீங்கள்
விரும்பிய செயல்களுக் குரிய வினைதுறை
யாவும் அவர் பொறுப் பாகும். உங்கள்
இடத்தில் இனி அவர் எங்கள் தஞ்சமாம்.

ஈடி: என்னநான் சொல்குவன், என்ன என் வேண்டுகோள்,
அவர்களில் அமைவுறும்? அன்னவர்க் கெளியனேன்
அவமுறப் பிழைத்தபின்.

(கிரயன் வரல்)

கிர: அரசே ஈடிபசு!
உம்பத இழிவினை உன்னி எள்ளவோ,
பண்டையும் பவவினை கண்டித் துரைக்கவோ,
நண்ணிலன் இங்குநான். நண்பரீர் கேட்பீர்!
மண்பதைப் புதல்வர்க்கு உம்கடன் மறுப்பினும்
இன்னுயிர் இறைவன் ஞாயிற் றவன்கடன்
நினைவினில் தரிக்க. தினகரன் கண்முன்
புன்மை இருண்மை புலப்படல் ஆகாது;
மண்வளி நீருமே மறுக்கொளல் ஆகாது;
அரமனை அகத்துள் அரசரைச் சேர்க்க;
துன்பிதை இனத்தவர் அன்றி மற்றையோர்
கண்கொளல் பரிவும் பண்புமில் பெற்றியாம்.

ஈடி: நண்ப ஒன்றுநான் நாடுவன்; என்போல்
பண்பிலான் ஒருவற் கண்ணளித் தருளல்
என்றுமே மறப்பரும் நன்றி யல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொருட் டன்றி உம்பொருட் டிறைபுகழ்
புரிதற் பொருட்டுப் பரிந்தோன் றிரப்பன்.

இர : இங்ஙனம் சூழ்ந்துநீர் இரப்பது யாதோ?

ஈடி : இக்கணம் என்னை இந்நகர்ப் புறத்து
மக்கள் கட்புலம் மருவாப் புலத்துச்
சேர்ப்பீர்.

இர : நன்றிதைத் தேர்க; நானதை
அயர்விலன் முடிப்பன்; ஆயின் இறைவன்
உய்ந்நெறி எண்ணித் தயங்குவன்.

ஈடி : ஏலவே
இறைநெறி எளிதில் அறிதகைத் தன்றோ!
தந்தையைக் கொன்றவித் தாழ்மகன் கொலைவிதிக்கு
இயைந்தவன் அல்லனோ. அன்னவன் எதிருளன்.

இர : இயம்பிய உண்மையே எனநாம் கொள்ளினும்,
இயைவுறும் இக்கணம் இன்னும் உயரிய
சான்றுநாம் வேண்டுவம்.

ஈடி : தாழ்வுற் றிழிந்த
ஈனன் எனக்கா ஈசனின் கட்டளை!

இர : கடவுட் பேணா,நல் ஏதுமுன் கண்டிலீர்!

ஈடி : அடியேன் அறிவேன். ஆயின் நின்தயை
உன்னி ஒன்றுநான் உரைப்பன்; அரமனை
தன்னுள் உறங்குநின் சகோதரி ஈம
வினைகளை வேண்டிய விதத்தில் ஆற்றுக.
நன்றதை முடிப்பாய் எனநான் நம்புவேன்.
என்னிலை பற்றியோ, என்னுயிர்த் தரிப்பினிப்
பொன்னு டிதைக்கறை புரியா தொழிந்திட,
அருளுவை; மாமலை அடைந்துநான் வாழ்ந்து
மரித்திட முன்னினேன்; என்பெயர் தன்னுடன்
என்றும் பிணைந்த குன்றே, சிதரன்!
என்னரும் பெற்றோர் என்பிணக் காடெனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்த அவ்விடம் சேர்ந்துநான் அன்னவர்
இச்சைக் கிணங்க இறப்பன்; எனினும்
தற்செயல் ஏனும் பிணிமூப் பேனும்
என்னைக் கொன்றிடும் என்றுநான் எண்ணிலேன்;
பின்னுறும் பொல்லாப் பீடைக் காளாய்
வருந்த அல்லவோ மரணத் திருந்து
விதியெனை விடுத்தது; வருவது வருக.
புதல்வரை நினைந்திடில்! மைந்தரை நினைந்து
கவலேல், கிரயன்! எவணவர் ஏகினும்
தம்நிலை காக்கும் தகையர் அன்னவர்;
எனினுமென் சிறுமியர் ஏழையர் தந்தையைப்
பிரிந்துண வருந்துதல் அறியார். யாவும்
வகுத்து நுகர்வதெம் வழக்கு; அவர் தமைத்
தகுமுறை காப்பாய் கிரயன்; கிரயன்!
ஒருமுறை அவருடல் கரமெடுத் தளைந்திட
அருள்வாய்; ஒருமுறை; அளியும்
பெருமையும் உடையோய்,
ஒருமுறை தீண்டின், ஒருமுறை! அவரை
இருவிழி மகிழ ஏற்றவன் அவன்.

(இசுமெனும் அன்றிகனியும் ஈடிபசு முன்
கொண்டுவரப்படுகின்றனர்.)

என்ன கண்மணி அனைய என்சிறார்
வெம்பலோ என்செவி வீழ்வது! கிரயனின்
அன்புதான் அவர்களை என்னிடம் கொணர்ந்தது.
என்கண் மணிகாள்!
இங்குதான் உளிரோ?

கிர: அன்னவர் இங்குளர். அவர்மேல் எவ்வளவு
அன்பு கொண்டனை, இன்றும் கொண்டுளாய்
என்பதை அறிந்தே இவணவர்க் கொணர்ந்தனன்.

ஈடி: இறைவன் அருளுனை என்றும் காக்க!
என்விதி தன்னிலும் இனியதை உனக்கவன்
விதிப்பன். எங்குளீர் புதல்வீர்! வருவிரென்
மருங்கு. உம் சகோதரன் கரமிவை பற்றுவீர்.
பண்டுநீ ரறிந்த கண்தமை உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் கண்தனைத் தடிந்த கரமிவை.
தந்தையோ, தந்தை யாகையில் அறிவோ
சிந்தையோ இன்றிச் செயல்வழிப் பட்டவன்.
கண்கள் உங்களைக் காணா ஆயினும்,
இணைந்தவை உகுக்கும் கண்ணீர் உமக்காய்.
உலகொடு நீங்கள் உறவுகொள் காலை
அலமரற் படுவதை அஞ்சுவன் எண்ணி;
அரசுநாள் உயர்நாள் திருநாள் இவையெலாம்
கரிநாள் ஆகிக் கலங்கிநீர் மனை செல,
மற்றைச் சிருரோ மகிழ்ந்து களிப்பர்.
பிற்றைநாள் மன்றலை விரும்பிநீர் நிற்கையில்
என்மகார் அவர்மகார் அவர்க்கும் ஒருவசை
அணையா தளிக்கும் ஆற்றல் உடைய
மனிதர் இருப்பரோ? என்னகம் இசையாப்
புன்மையின் பெயரும் உண்டோ உலகில்?
தந்தையைக் கொன்ற தந்தை, பிறவிப்
படுக்கையைப் புன்மைப் படுத்திய புல்லன்;
தன்பேற் றகவழி தான்பிறப் பளித்தோன்;
எனப்பிறர் எனுலுமை எள்ளுவர் ஆயின்,
கணவரைப் பெறுதல் ஒண்ணுமோ உமக்கு?
கண்மணி யனையீர் காணீர் எவரையும்.
அன்றியும் கனியிலாக் கன்னிமை என்னவும்
வாழ்வு பாழ்க்கவோ? மெனேசியசு மைந்த!
இன்னும் நீ என்மகார் இனத்தவன் அல்லனோ?
அன்னவர் தனிஒருத் தாதைநீ அல்லனோ?
அன்னவர்க் கின்னுயிர் அளித்த நாமெலாம்
பொன்றினம். கதியிலிப் போக்கறு சிறுமிகள்
மனைபதி யிலராய் வாடுதல் வேண்டா.
எனக்கு நேர்ந்தவை இவண்ர அணையாது
அளித்தல் உன்கடன். அன்னவர் இளையவர்;
அளியர், ஏழையர்; நினையலால் பிறகதி
இலாதவர்; நண்ப! இப்பணி ஆற்றுவை
அல்லவா? உறுதி! ஆணையின் கரங்கொடு!

(கிரயன் கை கொடுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ப ; நன்று நன்று நின்னயம் ;
கண்மணி காள் ! நீர் காலம் கழிய
அறிபவை பலவுள ; அதன்முன் அறியின்
பொறுத்தல் அரிதே. இருப்பினும் இறைவனை
இறைஞ்சும் போதுநீர் இரப்பதற் கொன்றுண்டு ;
நல்ல வாழ்விலும் நலிந்தோ சிறந்தோ
வாழும் வகையினை வேண்டல் வேண்டாம்.
வாழ்வீர் நுந்தையின் மேம்பட இனிதே.

கிர : புகுக மனையகம். போதுமும் மொழிகள்.

ஈடி : அகமதற் கிணங்குமோ ?

கிர : எதற்குமோர் அளவுண்டு.

ஈடி : ஆயின்நின் ஆணை எனக்குண்டு அல்லவோ ?

கிர : என்னஅவ் ஆணை ?

ஈடி : வெளிச்செல எனக்குமுன்
அளித்தநல் ஆணை.

கிர : நம்மிறை அதற்கோர்,
மொழிஎனக் கருள்வன், என்செயல் ஒன்றிலை.

ஈடி : என்பொருட்டு இறையோர் ஏதும் புகலார்.

கிர எனின் நீர் வேண்டியது எய்துவீர் திண்ணம்.

ஈடி : உன்றன் இசைவும் ஒன்றுமோ ?

கிர : அறிவு கடந்தவை பற்றிநான் பேசிடேன்.

ஈடி : (திருப்தியுடன் ஆயின் வெறுப்புடன்)
இட்டுச் செல்க.

கிர : நடக்க ; நன்று.
(ஈடிபசு மக்களை அணைத்தவாறு அரண்மனை நோக்கி நடக்கிறன்.)
ஆயின் மக்களை விட்டுச் செல்க.

ஈடி : என்னிட மிருந்தென் மக்களைப் பிரித்தல்
நன்றன்று ; வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிர : இனிநீ ஆணை
யிடுவதை விடுக. படிந்தினி ஒழுக.
உமதர சென்றே ஒழிந்தது உணர்க.
(ஈடிபசு இட்டுச் செல்லப்படல்.)

குழு : தீபசு நன்னகர்ச் செல்வரீர் ! கேட்க ;
யாவரும் போற்றுமெம் ஈடிபசு எனும்பேர்
மன்னவன் இயன்றெழு மாபெரும் சூழ்ச்சிகள்
என்பவை வீழ்த்திடும் வெல்திறன் வாய்த்தவன் ;
பொன்பூத்த செல்வத்தில் மன்பதை எல்லாம்
மனமழுங்கும் பாங்கினன் ; ஆயினும் நேர்ந்ததென் ?
அன்னவன் வாழ்வினில் எண்ணரும் துன்பங்கள்.
இன்ன நிலைமையை எண்ணிடில் மானுடன்
என்றுமே தானுறு வன்னிலை நெஞ்சினில்
உன்னுவன் அல்லனே ? அன்றியும் பார்மிசை
தானிறு காட்டிற்குத் தான் பெறும் இன்பினை
ஊனொடு கொண்டுசெல் நாள்வரை, யாரையும்
இன்பம் உழந்தவர் என்பது சாலுமோ !

முற்றும்.

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No..................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திற் சிறந்த நாடகம் எது? என்று என்னை ஒருவர் கேட்டால், சொபக்கிளிசு எழுதிய "மன்னன் ஈடிபசு" என்று நான் தயங்காமற் கூறுவேன். நான் மட்டுமல்ல, ஒரு முறை இதனை வாசித்த எவரும் அவ்வாறே சொல்வர். வரைவிலக்கணத்தாற் கட்டுப்படாது நாடகம் என்பதன் உண்மை வடிவத்தை அறிய விரும்புவார் எவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நாடகம் "மன்னன் ஈடிபசு".

செய்யுட் களத்தின் இரண்டாவது வெளியீடு இந்நூல். முதலாவது வெளியீடு, கவிஞர் முருகையன் எழுதிய 'வந்து சேர்ந்தன' என்பதாகும். செய்யுள் வளர்ச்சிக்கு உழைக்க எழுந்த ஓரியக்கம் செய்யுட் களம். செய்யுட் களம் "நோக்கு" எனும் ஒரு பா ஏட்டினை நடாத்தி வந்ததைத் தமிழன்பர்கள் அறிவார்கள். தொடர்ந்தும் செய்யுட்களம் பா ஏடுகளும், பா நூல்களும் வெளியிட்டுச் செய்யுளிற்குத் தொண்டாற்றி வரும்.

செய்யுட் களம், 149/3, காலி வீதி, கொழும்பு.

விலை ரூபா 2/-

குகன் அச்சகம், தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org